REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER

# ஈழகேசரி

தேசீய வார வெளியீடு

மலர் 17 | சுன்னுகம் — விய — ஆனி ௩௰, 14-7-'46 — ஞாயிறு | இதழ் 2

JAFFNA COLLEGE LIBRARY JUL 15 1946 VADDUKODDAI, CEYLON.

# முதல்வரின் இறுதிச்சுமை?

## இலங்கை இந்திய சமரச சபை

[கொழும்பு அரசியல் நிருபர்]

**அரசாங்கசபை முதல்வர் ஸ்ரீ. டி. எஸ். சேனநாயகா தமது நான்காவது வரவு செலவுத் திட்டத்தை இம்மாதம் 18-ந் திகதி அரசாங்கசபையிற் சமர்ப்பிப்பார். இது இவருடைய நான்காவது வரவு செலவுத்திட்டமாகும்.**

டொனமூர் அரசியல் திட்டம் ஆரம்பமாகி இப்போது பதினைந்து வருடங்களாகி விட்டது. அடுத்த வியாழக்கிழமை சமர்ப்பிக்கப்படும் திட்டம் இப்போதுள்ள அரசியல் திட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்படும் இறுதித் திட்டமாக அமையலாம்? இது பற்றி அரசியல் வட்டாரங்களில் மிகுந்த பரபரப்பு ஏற்பட்டிருக்கின்றது.

டொனமூர்த்திட்டத்தின்கீழ் மற்றுமோர் வரவு செலவுத் திட்டத்துக்கு இடமிருக்குமெனக் கருதினுல் அது தவருகாது. அனுமான் வாலைப்போல் இலங்கை அரசாங்க சபையின் காலமும் நீடித்துக் கொண்டு போவதைக் கவனிக்கும்போது மக்களின் பிரதிநிதிகள் அத்தனைபேரும் கொடுத்துவைத்து பிறந்தவர்கள் என்றே சொல்லவேண்டும்.

வெள்ளை அறிக்கையை அரசாங்கசபை ஏற்றுக்கொண்டதும் புதிய பாராளுமன்றத் தேர்தல் அடுத்துவரும் மே மாதம் ஆரம்பமாகுமெனப் பலரும் நம்பியிருந்தனர். ஆனுல் இப்போதுள்ளநிலையில் 1947-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலேதானும் பொதுத்தேர்தல் ஏற்படுமோவென்பது சந்தேகமான விஷயம்.

பொதுத்தேர்தல் ஒன்றை நடத்தி முடிப்பது சுலபமான காரியமன்று. வாக்காளர் இடாப்புகள் தயாராக வேண்டும். வாக்குச் சீட்டுகள் போதியளவுக்கு அச்சடித்தாக வேண்டும். அத்துடன் இவற்றைச் சார்ந்துவரும் அநேக வில்லங்கங்களையும் சமாளிக்க வேண்டும். இம் முக்கிய காரணங்களே பொதுத் தேர்தலுக்கு முட்டுக்கட்டைகளாகக் கிடக்கின்றன.

கடந்த வருடம் வரவு செலவுத் திட்டத்தை அரசாங்க சபையிற் ஸ்ரீ பண்டாரநாயகா சமர்ப்பித்தார். அப்போது அவரே தற்காலிக சபை முதல்வராகக் கடமையுமாற்றினுர். சபை முதல்வர் ஸ்ரீ சேனநாயகா அந்தநாட்களில் சீமை சென்று இலங்கையின் அரசியல் சீர்திருத்தம்பற்றி குடியேற்றநாட்டு மந்திரியுடன் பேச்சுவார்த்தைகள் நிகழ்த்தினுர். ஸ்ரீ சேனநாயகாவும் தற்காலிக சபை முதல்வராகவிருந்த காலத்தில் வரவு செலவுத் திட்டமொன்றை அரங்கேற்றியதுண்டு. அடுத்தவாரம் இவர் தமது நான்காவது வரவு செலவுத்திட்டத்தைச் சமர்ப்பிப்பார். இது அவருக்குப் பெரு

மை யளிக்கும் ஓர் காரியமாகும்.

நிதிக் காரியதரிசி சேர் ஒலிவர் இப்போது லண்டனில் நிற்பதால் இவர் அடுத்தவார அரசாங்கசபைக் கூட்டத்திற் பங்குபற்ற முடியாது. ஸோல்பெரித் திட்டத்தின்படி 'பார்லிமென்ட்'டில் வரவுசெலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கும் பொறுப்பு நிதிமந்திரியைச் சேர்ந்தது.

### சில விபரங்கள்

அடுத்த நிதி வருடத்தில் (1946—47) அரசாங்கத்துக்குப் பொதுவருமானம் ரூபா 341,111,756 என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இன்று நிலவும் வரிகளுக்கேற்ப அரசாங்கத்துக்கு 342,000,000 ரூபாய் கிடைக்குமென உத்தேசம். இவ்வருடத்தைவிட அடுத்த ஆண்டில் ஏறக்குறைய 5½ கோடி ரூபாய் அதிகமாகச் செலவு செய்வதெனஅரசாங்கம் யோசித்திருக்கின்றது. கடந்த மூன்றுவருடங்களாக நாட்டின் நிர்வாகச் செலவு அதிகரித்துக்கொண்டே வந்திருக்கின்றது.

அடுத்தவருடத் திட்டத்திற் கல்விக்கென ரூ. 60,618,521 ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இலவசக் கல்வி ஏற்பாட்டுடன் கல்விப் பகுதிக்கு அதிகமான பணம் வேண்டியதாகின்றது. இலங்கைப் பல்கலைக் கழகத்துச் செலவு 500,000 ரூபாய்வரை உயர்ந்திருக்கின்றது. விவசாயப்பகுதிக்கும் வைத்திய சுகாதாரப் பகுதிக்கும் முன்னைய ஆண்டுகளிலும் பார்க்க இம்முறை அதிகமான தொகை அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. அடுத்தவருடத்தில் இலங்கை அரசாங்கத்துக்கு வரவுக்கேற்ற செலவு தாராளமாகவிருக்கின்றது.

அதிக பணஞ் செலவாகியவிடத்தும் நாட்டுமக்களைப் பஞ்சமும் பிணியும் வாட்டுகின்றன. செலவுகள் வளர்ந்து கொண்டேயிருக்கின்றன.

# இந்தியத் தலைவர்கள் விஜயம்

### 'ஹர்த்தால்' நின்றது

உருளிவெள்ளித் தோட்டம் சம்பந்தமாக இலங்கை இந்தியக் காங்கிரஸ் ஏற்படுத்திய இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் ஹர்த்தால் கடந்த புதன்கிழமை [10-7-46] கைவிடப்பட்டது. இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் சமரசம் நிலவ வேண்டுமெனவும் அதற்கேற்ற சூழ்நிலையை உண்டாக்குவதற்காக வேலை நிறுத்தத்தைக் கைவிடல் அவசியமெனவும் அகில இந்தியக் காங்கிரஸ் காரிய நிர்வாகசபை சமீபத்திற் கூடி ஓர் தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றது.

இந்தியத் தொழிலாளர்களை நியாயமான முறையில் நடத்துவதுடன், அவர்களுக்குப் பிரஜா உரிமையும் வாக்குரிமையும் வழங்கவேண்டுமெனவும் காங்கிரஸ் காரிய நிர்வாகசபை கருதுகின்றது. இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே ஆண்டுக்கணக்காக நிலவும் தொடர்புகளை அகற்ற முடியாதெனக் காங்கிரஸ் நிர்வாகசபை கூறிவிட்டு ஹர்த்தாலைப் பற்றிப் பின்வருமாறு தீர்மானித்திருக்கின்றது. "இந்தியத் தொழிலாளர் அனைவரையும் பாதிக்கின்ற பொருளாதாரப் பிரச்னைகளுடன் இது தொடர்புற்றிருந்தபோதிலும் அரசியற் பிரச்னைதான் இதன் அடிப்படை."

இலங்கை இந்தியர்களின் தகராறுகளைத் தீர்த்துவைப்பதற்காக ராஷ்ட்ரபதி பண்டித ஜவஹர்லால் நேரு, ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார், ஸ்ரீ அரியநாயகம், ஸ்ரீ ராமச்சந்திரன் ஆகியோர்கொண்ட ஒரு நிர்வாகசபை நியமிக்கப்பட்டிருக்கின்றது.

### ஜவஹர் கோபம்

ஸ்ரீ அரியநாயகம் சர்வதேசப் புகழ்வாய்ந்தவர். இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அறிஞர். இப்போது ஹிந்துஸ்தானி தாலிமி சங்கத்துக் காரியதரிசியாகவிருந்து பணிபுரிகின்ருர். காந்திஜியின் ஆசீர்வாதத்துடன் வார்தா ஆச்சிரமத்திலுள்ள கல்வி ஸ்தாபனங்

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

# கண்விழித்த காஷ்மீர்

## வளம் மிகுந்த நாடு

**சென்ற சில வாரங்களாகக் காஷ்மீர சமஸ்தானத்தின் பெயர் அரசியலுலகில் நன்ருக அடிபடுகின்றது. சுதந்திரக் கிளர்ச்சி ஏற்பட்ட இக்காலத்தில் எந்த நாட்டிற்ருன் கலக்கமும் குளப்பமும் நிகழாதொழியும்**

காஷ்மீர சமஸ்தானத்தின் பூர்வ சரித்திரத்தை நன்கறிந்தாலன்றி அங்கே நிகழும் சம்பவங்களை உள்ளபடி விளங்கிக் கொள்ளுதல் அரிது.

காஷ்மீர் தேசத்து மன்னர் ஒரு வகுப்பினர். பிரஜைகள் இன்னெரு வகுப்பினர் நூற்றுக்குத் தொண்ணூறு வீதம் அங்குவசிப்போர்முஸ்லீம்கள். மிகுதியானேர் இந்துக்களும், மற்றையோருமே. இந்து மன்னரின் ஆட்சி பொதுசனங்கட்குப் பிடிக்கவில்லை. மன்னரை வெளியேறும்படி மகாநாடுகள் கூடி நெருக்குகின்றனர். அவர்கள் அவ்வாறு கேட்பதற்குக் காரணமில்லாது போகவுமில்லை.

### பெரிய குறைகள்

இச் சமஸ்தானத்து முஸ்லீம் பிரஜைகள் வறுமையில் ஆழ்ந்துள்ளார். கல்வியறிவோ கிடையாது. நூற்றுக்கு நாலு பேரே அவர்களுள் எழுத வாசிக்க அறிந்தவர். நித்திய தரித்திரமே அவரைப் பிடித்து நிற்கும் பசாசு. அரசாங்க உத்தியோகத்தர் யாவரும் இந்துக்களாகும் பிராமணரே. சேனையில் போர்வீரராகவும் முஸ்லீம்கள்சேரவியலாது. ஆயுதங்களும் வைத்திருக்க இவருக்கு உத்தரவில்லை. எவ்வளவு காலத்துக்கு இந்நிலையிலிருப்பது? முஸ்லீம்களுக்கு உத்தியோகம் அளிக்காமைக்குக் காரணம் அவர்கள் கல்வியறிவில்லாதிருப்பதாகக் கூறப்படுகின்றது. அப்படியான நிலை ஏற்பட்டமைக்கும் சமஸ்தான அரசினரே காரணராவர். இவ்வாறு முஸ்லீம்களை என்றும் கீழ்நிலையில் இருக்கச்செய்து தாம் அரசியலை விருப்பப்படி இனிது நடத்தலாமென எண்ணியதே இத்தீமைகளையெல்லாம் வருவித்ததாகும்.

### விழித்தனர்

இவ்வளவு அநியாயமாகத் தாம் நடத்தப்படுவதைச் சகிக்கவியலாதுமுஸ்லீம்கள்விழித்தெழுந்தனர். இக்குறைகளையெல்லாம் கண்டுகொண்டிருந்த இளைஞரும் ஆசிரியருமாகும் மகமத் சேக் அப்துல்ல என்பவர் இச்சமஸ்தானத்தை மீட்சியடையச் செய்யவேண்டுமென்று சித்தங் கொண்டாடி பெரிய முஸ்லீம் மகாநாடுகளைக் கூட்டினர். ஜனநாயக அரசியல் அமைக்கப்படவேண்டுமென்றனர். அரசியற்றிருத்தங்கள் அவசியமென எடுத்துக் காட்டினர். சமஸ்தான அரசினர் இதற்கு இணங்காராகவே பெரிய பயங்கரமான கலகம் நிகழ்வதாயிற்று. அடக்குமுறை கையாளப்பட்டது. இராணுவச் சட்டம் அனுட்டானத்துக்கு வந்தது. அநேகர் துப்பாக்கிக் கிரையாயினர். சமஸ்தான படைகள் கலகத்தை அடக்கவியலாதனவாயின. ஈற்றில் பிரிட்டிஷ் படைகள் விரைந்து கொண்டு சென்று ஒருபடி கலகத்தை அடக்கினர். வெளித்தோற்றத்தில் எல்லாம் சமாதானம் ஏற்பட்டதாகத் தோற்றியது. ஆனுல், காஷ்மீர் பிரஜைகள் மனம் வெந்துகொண்டே யிருந்தது; [illegible]

### சில உரிமைகள்

பின்னர் காஷ்மீர் மகாராஜா சிறிது உணர்ச்சி வரப்பெற்றுச் சிற்சில அரசியற்றிருத்தங்களை வழங்கினர். ஒரு சட்ட சபையை ஏற்படுத்தினர். ஆனுல், அதற்கு உண்மையதிகாரம் எதுவுங் கிடையாது. முழு அதிகாரமும் மகாராஜாவின் கையிலேயேயிருந்தது. சட்டசபைத் தீர்மானங்கள் அரசினரால் நிச்சயம் கைக்கொள்ளப்படவேண்டுமென்ற நியதி கிடையாது. இச்சபையில் தேர்தல் முறையில் அங்கத்துவம் பெற்ருேர் மிகச் சிலரே. முஸ்லீம்கள் மனதில் ஏற்பட்ட அதிருப்தியைச் சாந்தி செய்யலாமெனப் பல வழிகளை அனுட்டித்தனர். உயர்ந்த தனவந்தராயும்நடுத்தரவகுப்பினராயுமுள்ள முஸ்லீமகளுக்கு ஓரளவுக்குச் சில உயர்ந்த உத்தியோகங்களை வழங்கினர். கமஞ் செய்வதற்கு விஸ்தீரணமான நிலங்களும் கொடுத்தனர். என்ன செய்வது? ஏற்பட்டுள்ள மனஸ்தாபம் நீங்கினபாடில்லை. பெருந்தொகையான முஸ்லீம் ஏழைகள் ஏதாவது நன்மைகளை யடைந்தாரோவெனில் இல்லையென்றே கூறவேண்டும். அவர்களின் வறுமை வறுமைதான். நேரத்துக்குப் போதிய உணவுங் கிடையாது. கமஞ் செய்து வாழச் சொந்த நிலமுமில்லை. சிலர் காஷ்மீர் எல்லையைக் கடந்து பாஞ்சால மாகாணஞ் சென்றும் வயிற்றுக்குப் பிழைத்தனர்.

### உண்மையென்ன?

பெருந்தொகையாகமுஸ்லீம்கள் வாழும் நாட்டில் ஏழைகள் இவ்வளவு கஷ்டப்பட சிறுபான்மையினராகும் இந்துக்கள் இவ்வாறு சுகமாக வாழ்வதா என்பதுதான் மிக்க ஆத்திரத்தை உண்டாக்கியதாகும். காஷ்மீர் தேசமோ மிக்க செழிப்புடைய நாடாகும். இருந்தென்ன? கமஞ் செய்து வாழவாவது அவர்கட்கு நிலம்

(தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க)

## பெண்கள் திலகம்



இந்தியத் தேசீயக் காங்கிரஸின் புதிய காரிய நிர்வாக சபைக்கு 14 அங்கத்தினரைப் பண்டித ஜவஹர்லால் நேரு நியமித்திருக்கின்ருர். இருபெண்மணிகளுள் ஸ்ரீமதி கமலாதேவியும் ஒருவர். ஸ்ரீமதி மிருதுளா சாராபாய், டொக்டர் கேஸ்கர் ஆதியோர் செயலாளர்களாகப் பணியாற்றுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட்டியின் ஆராய்ச்சி

தங்கச்சி சரசு ஒரு தமிழ் உபாத்தியாயினி. பாட்டியும் தங்கச்சியும் தருக்கப் பயிற்சி செய்வது எங்கள் வீட்டுத் தினசரிக் காட்சிகளில் ஒன்று. தருக்கம், தோசைக் கரைத்த பச்சடியிலிருந்து ஸோல்பெரி கொம்மிஷன் வரை பல துறையைச் சேர்ந்தனவாயிருக்கும். இடம், கொல்லைப் பக்கத்திலிருந்து சாய்வு நாற்காலிவரை பல ஸ்தலங்களைச் சேர்ந்தனவாயிருக்கும். காலம், சாப்பிடும் நேரம் தொடங்கிக் கோயில் கும்பிடும் நேரம்வரை, பல சந்தர்ப்பமாயிருக்கும்.

இதைக் கேட்டுக் கேட்டு எனக்கு நரம்பு பெலப்பட்டு விட்டாலும், சில சமயங்களில் பெரிய ஆபத்துள் அகப்பட்டுக்கொள்வதுமுண்டு.

பாட்டியும் சரசுவும் தருக்கத்தை முடிக்கும் மந்திரத்தைக் கற்கவில்லை. இதற்காக அவர்கள் சீதாவிடம் (எனது தர்மபத்தினி) செல்வார்கள். சில சந்தர்ப்பங்களில் அவர்கள் சீதாவின் தீர்ப்பில் திருப்தியடையா விட்டால் மூவரும் என்னிடம் வந்து சேருவதுமுண்டு. அச்சமயம் பார்த்து 'ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம்; இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம்' என்ற பழமொழியும் என்னிடம் வந்து சேரும். யார் கோபித்தாலும் சீதாவுக்கு மாறாகத் தீர்ப்புச் சொல்லமுடியுமா? அப்பப்பா! மூன்றாநாள்......

இவைகளை அறிந்த நான் சில தருணங்களில் தருக்கப்பயிற்சி ஆரம்பிக்க, மெல்ல நழுவிவிடுவதுமுண்டு. அன்றையத்தினம் அகப்பட்டுவிட்டேன்.

பாட்டியும் சரசுவும் பிரசன்னமாகிறார்கள். மகாபாரதத்திலே, கர்ணன், வித்தை பயிலப் பிராமணர் அல்லாதாருக்கு வித்தை கற்றுக் கொடுப்பதில்லையென விரதம் பூண்ட பலதேவரிடம், தான் பிராமணன் என்று பொய் சொல்லி வித்தை பயில்கிறான். ஒருநாள் பலதேவர் கர்ணன் மடியில் நித்திரை கொள்ளக் காலில் வண்டு கடிக்கிறது. காலை உயர்த்தி வண்டைக் கலைக்க முயன்றால் குருவின் நித்திரை கெட்டுவிடும் என்று கர்ணன் வாளாவிருக்கிறான். வண்டு காலைத்துளைத்து இரத்தம் ஆறாகப்பெருகுகிறது. ஈர உணர்ச்சியால் பலதேவர் நித்திரைவிட்டு எழுகின்றார். 'பிராமணனுக்கு இவ்வளவு உபத்திரவத்தைத் தாங்கக்கூடிய உணர்ச்சியில்லை' யென்றும், 'இவன் சத்திரியனே' என்று முணர்ந்து, 'உற்றபோரிற் கற்றதை மற' என்று கர்ணனுக்குச் சாபமிடுகிறார். அதனால் அருச்சுனனோடு சண்டையில் கர்ணன் இறக்கிறான். 'இப்படி அநியாயமான சாபத்தைப் பலதேவர் இட்டது அநீதியென்பதும், அந்த அநீதியால் பலதேவரின் சாபம், திரும்பிக் குருத்தொழில் செய்வோர் எல்லோரையும் பீடித்திருக்கிறதென்பதும், இதனால் உபாத்தியாயர்களுக்கு, உற்றபோரிற் கற்றதைக் கையாளத் தெரியாதென்பதும்' பாட்டியின் கட்சி.

யாரோ செய்தது, யாருக்கு மேன் பிடிப்பான்? அப்படி என்ன? உபாத்தியாயர்கள் உற்ற போரிற் கற்றதைக் கைவிட்டார்கள்; இதெல்லாம் வீண்கதையென்பது சரசுவின் கட்சி.

'நான் சும்மாவானால் சம்பளத் திட்டத்தில் ஆசிரியர்கள் செய்வதை இருந்துதான் பாரேன்' என்றாள் பாட்டி.

'இருந்து தான் பாரேன்' என்றாள் சரசு.

'உனக்கு நெடுக வாய்தான், சரியானவன் சந்தித்தால் உனது வாயைப்பற்றி விளங்கும்' என்றாள் பாட்டி.

'அவர் ஆராக்கும்' என்றாள் சரசு.

'கசின்'

இப்படித்தான் அவர்கள் தருக்கம் முடிவென்னும் சுபவேளையை அடைவது வழக்கம். பாட்டியின் கட்சி—ஆராய்ச்சி உலகத்துப் பாட்டியாகையால், ஆராய்ச்சியாவது கற்பனையாவது இருக்கவேண்டுமென்பது உண்மை. ஒருவேளை உண்மைதானோவென்று கூடச் சில சமயம் என் மனம் நினைக்கச் செய்கிறது. உங்கள் மனம் என்ன சொல்கிறது? பாட்டியின் ஆராய்ச்சி பிழைதானா? பிழையல்லாவிட்டால்......

## 261-ம் இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

**கைத்தறி நெசவுப்புடவைகளை இறக்குமதி செய்பவர்களறிய**

சென்னைப் 'பிறெசிடென்சி' யிலிருந்து கைத்தறி நெசவுப் புடவைகள் ஏற்றுமதியாகுமுன் நிதரிசனப்படுத்தவும் முத்திரையிடவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. 1946-ம் ஆண்டு ஜூன் மாதம் 10-ந் திகதிக்குப் பின் சென்னை மாகாணப் புடவைக் கொம்மிஷனர் சான்றுரைப்படுத்திய பட்டியலின் கைத்தறி நெசவு வார்நாமாக்கள் மட்டில் இவ்வொழுங்கு நடைமுறைக்கு வருமென அறியக்கிடக்கிறது. 1946ம் ஆண்டு ஜூன் மாதம் 10-ந் திகதிக்குப்பின் மாகாணப்புடவைக் கொம்மிஷனர் சான்றுரைப் படுத்திய பட்டியல்கட்கான புடவைகள் சென்னை ஏற்றுமதி விலை அட்டவணையின் வரிசை இலக்கமும் முத்திரையிடப்பட்ட திகதியும் கொண்டிருக்கும். இலங்கையின் ஆகக்கூடிய சில்லறைவிலை 39-ம் இலக்கப் புடவைக்கட்டுப்பாட்டுக் கட்டளையில் கண்டுள்ளபடி சென்னையின் நிதரிசனத்துக்கு ஏற்பக் கணக்கிடப்பட்டு எம்மால் முத்திரை இடப்படும்.

2. சென்னை மாகாணப். புடவைக் கொம்மிஷனரால் முத்திரையிடப்பட்ட கைத்தறிவு நெசவுப் புடவையை இறக்குமதி செய்வோர் 240-ம், 248-ம் புடவைக கட்டுப்பாட்டறிவித்தல்களுள் வேண்டப்பட்ட, விலை அடையாளம் இட உதவும் மாதிரிப் புடவைகளை உதவிக்கட்டுப்பாட்டதிகாரிக்கு அனுப்பவேண்டியதில்லை. சம்பந்தப்பட்ட பட்டியலகளை மாத்திரம் விலை அடையாளம் இட வேண்டும் விண்ணப்பத்துடன் அனுப்பவேண்டும்.

3. எப்படியென்றாலும் மாதிரிகள் விலை அடையாளம் இடவரும் நமது அலுவலாளரால் விலை அடையாளம் இட்டபின் அலுவலகத் தேவைக்காகச் சேர்க்கப்பட்டுப் பின் வியாபாரிக்கு அனுப்பப்படும்.

4. 240-ம் 248-ம் புடவைக்கட்டுப்பாட்டறிவித்தலில் உள்ளவைகள் சென்னை மாகாணப்புடவைக் கொம்மிஷனரால் முத்திரையிடப்படாத புடவைகள் மட்டில் அனுசரணையிலிருக்கும்.

ஈ. றேட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி.
கொழும்பு 8.7-1946 [2832]


"MEDIUM"
Registered Commercial Centre
[Estd. 1929]
261, KANKESANTURAI ROAD
VANNARPONNAI :: JAFFNA

For the sale of Estates, Houses & Properties, Fields etc. etc. communicate with us. We do it on a purely commission basis

Manager
MEDIUM
[2824]



# புகையிலைப்பயிர் செய்வோர்க்கு — ஓர் விசேஷ அறிவித்தல்

# புகையிலை

## கொழும்பு கொம்மேர்ஷல் கம்பெனியார்

அநேக வருஷங்களாக எல்லாப் பயிர்களுக்கும் வேண்டிய பசளைவகைகளை விநியோகஞ் செய்பவர்களாக இருந்து வருகிறார்கள்.

புகையிலைப் பயிர்ச் செய்கைக்கு அவசியமான பசளைகளைப்பற்றி விசேஷமாக அறிந்தவர்கள்

# C. C. C.

பிரத்தியேக புகையிலைப் பசளைக் கலப்புகளை உபயோகிப்பதாலேயே சிறந்த செழிப்பையும் மிக உயர்ந்த லாபத்தையும் பெறமுடியும்

விசேஷ ஆலோசனை இலவசமாகக் கூறப்படும். எங்கள் விசேஷ விற்பனை ஒழுங்குகளைப்பற்றிய விபரங்களுக்கு உடனே எழுதவும்.

## கொழும்பு கொம்மேர்ஷல் கம்பெனி லிமிற்றெட்

(பெரிய பிரித்தானியாவில் சழதாயமாக்கப்பட்டது)
(அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது)

THE
COLOMBO
COMMERCIAL
COMPANY
LTD.

Incorporated in Great Britain
Liability of Members Ltd.

[2814]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறநானூறு 2

# அறிவும் நீதியும்

புலவர்
மு. கோவிந்தசாமி

**பு**றநானூற்றிற் பெரும்பாலான பாடல்கள், புலவனை அரசன் தன்னிடமுள்ள தெல்லாங் கொடுத்துப் பெருமைப்படுத்துவதாகவும், அரசன் வென்றிவீரம் இவற்றைப் புலவன் புகழ்ந்துரைப்பதாகவுமே உள்ளன. இருவரும் ஒருவரையொருவர் மிகவிழைந்து ஒன்றுபட்டோரெனக் காண்கின்றனர். அன்பினால் இணைந்தும் ஆர்வமுற்றும் வாழும் இவர்கள் வாழ்விலிருந்து அந்நாட்டிற் கேற்படும் நன்மை யாது? நாம் அறிவது யாது? ஆம், அவர்கள் ஒருவரை மற்றவர் கூடி வாழ்த்தி மகிழும் அக்காட்சி, அறிவும் நீதியும் அல்லது கலையும் காவலும் இணைந்திலங்குமோர் நற்சாட்சியாக அமைகிற தெனலாம்.

புலவர் என்றாலே அறிவுடையோர் எனக் குறிக்கும். புலன்களின் வழியுயரும் அறிவே புலம் எனவும் அதிலிருந்தே புலவர் என்ற சொல் அமைந்தது எனக் கூறுவதுண்டு. 'புலவர் பாடாது வரைக என் நிலவரை' என அரசன் தன் நாட்டு மொழியறிஞனைக் கூறுகிறான். ஒரு புலவன் அரசனை, 'வேந்தனும் அல்லவை செய்யான் காக்கும்' என அவனது தீமையில்லா செம்மையே நாட்டியொழுகும் 'நீதி'யையுடையவன் எனப் புகழ்கிறான். இவற்றால் புலவன் அறிவே வடிவானவனென்றும், அரசன் நீதியே வடிவானவனென்றும் அன்று கருதினரென்பதனை யறிகிறோம். அப்பொழுது ஏன் இதனை 'அறிவும் நீதியும்' பிணைந்த காட்சி யெனக் கூறலாகாது?

அன்றைய புலவன் இன்றுபோல, வெறும் உரைநடை யெழுதும் வன்மை யென்றோ அன்றி அதுவுமின்றியோ வாழ்ந்து புலவனாக முடியாது. அவன் பாவலனாக (கவிஞனாக) வேண்டும். பாணர், விறலி யென்றாலே இசை, நாடகக் கலைவளர்ப்போர் என்பது பொருள். பண்ணை வளர்க்கும் சாதி பாண் (பாணர்) சாதியாகிறது. திறம்பட ஆடுவோராகையாலே விறலியர் (திறமையுடையோர்) ஆகின்றனர். இப்படி கவிதை, இசை, நாடகம் ஆயகலைகளாகவே அன்றைய அரசன் வளர்த்த புலவர் விளங்குகின்றனர். அரசன் அளிக்காமையால் 'பெரிதாலத்தை யென் கடும்பின திடும்பை, இன்னே விடுமதி பரிசில்' எனத் தன் வாழ்வில் வறுமை மிகுந்ததைக் கூறித், தமது கலைவளராது தளர்ந்து கிடக்கும் நிலையினைக் கூறுகிறான். இதனால் அரசன் புலவரை அளித்துக் காக்கவே இருக்கிறான். பின், ஏன் இதனைக் 'கலையும் காவலும்' இணைந்த காட்சியாயும் எழுதலாகாது? புலவரும் அரசரும் பிரியாத இந்நிலை; விழைந்து காணும் இக்காட்சி என்ன உண்மையை உணர்த்துகின்றது.

ஒரே குறிக்கோளுடன் வாழ்வை நடத்தும் இருவர் விழைந்து நட்பு கொள்வது இயற்கைதானே? பாதுகாப்பு மந்திரியும், சட்ட மந்திரியும் ஒத்து ஓர் நாட்டை நடத்தாவிடில் அந்நாடு என்னவாகும்? நாட்டின் அமைதி, இன்பம், நாகரிகம் இவை உயர்வதே குறியாக்கொண்டு வாழும் அறிவும் நீதியும் இணைந்து நட்பாவதில் வியப்பென்ன? அறிவு (புலவன்) நீதி (அரசன்) இவற்றின் குறிக்கோள் தான் வேறு யாது?

இன்னும், ஒரு துறையில் விருப்பத்துடன் உழைக்கும் இருவர் ஒன்றுபடலும் இயற்கைதானே. நம் நாட்டுக் கல்வி மந்திரி யிருக்கிறார். அவர் தமிழ் அறிஞரிடம் நட்புக் கொண்டால் (கொள்ளத்தானே செய்யும்) அதில் விந்தை யில்லையே! ஆனால், இன்றுபோல தம்மொழி தெரியாது ஆங்கிலம் படித்து வீட்டுத் தம் நாட்டை ஆளும் கேலிக்கூத்து அன்றில்லை; இருக்கவும் விடமாட்டார்கள். அரசர்களும் பெரும் புலவராக விளங்கியுள்ளனர். ஆகவின் அந்நாட்டு மொழியிற் சிறந்த அறிஞரை (புலவரை) அவன் விழைந்து நட்புகொண்டான். ஒரு நாட்டின் மொழிதானே உண்மையாக மக்களை மனிதராகவும் அறிவுடையோராகவும் ஆக்குவது. அரசன் மொழியில் போதிய தேர்ச்சியில்லாதிருந்தால் அந்நாடு எப்படி உருப்படும்?

மற்றும், அரசன் புகழை விரும்பினான். இசைபடவாழ்வதல்லது; புகழொடு தோன்றுவதல்லது மனிதனுக்கு வேறு கடமையும் பெருமையும் யாவை? புகழை யாரிடம் பெறுவது? தக்காரென்பதும் தகாரென்பதும் சிறியோராலா மதிக்கப்படுவது; அறிவிற்பெரியோரால் (மிகை மக்களால்) அல்லவா மதிக்கப்படவேண்டும். அறிவிற் பெரியோன் யாவன்? அந்நாட்டு மொழியில் அறிஞன் தானே அதற்குத் தக்கோனாக முடியும்? அதனாற்றான் அரசன் புலவனை விழைகிறான். புலவன் அரசனிடம் ஏன் செல்கிறான். அறிவைப் பரப்பவே வாழ்கிறான் புலவன். வாழ்வு நடக்க வேண்டுமே! பொருள் வேண்டாமா? அறிவை வளர்ப்பதே கடமையாகவுள்ள தன்னைக் காப்பது யார் கடன்? பொது மக்களால் எத்தனை பேரைக் காக்க வியலும்? அன்றி பிச்சை யேற்பதா? நாட்டின் அரசன் (அரசு) தான் அதற்குப் பொறுப்பாளி; அவனாலேயே முடியும் எனக் காண்கிறான்.

உரிமையுடன் அவனைநாடி உதவிபெறுகிறான். புறநானூற்றுக்காலத்தே வாழ்ந்த அரிஸ்டாடில் என்ற கிரேக்கப் பேரறிஞனும் 'ஓர்நாட்டின் கல்விமுழுதும் அரசாங்கத்தின் பொறுப்பில்தான் வளரவேண்டும்' என்கிறான். இன்றும் அப்படித்தானே, 'கல்வி முழுதும்; கலைக்கழகங்கள் முழுதும் அரசாங்கத்தின் கீழ் நேரே கொண்டுவரப்படவேண்டும்' என்கிறோம். இதைத்தான் அன்றைய புலவன் அரசனை அணுகுவதன் வழியே வெளிப்படுத்துகிறான். நாட்டின் கலையை வளர்த்தல் அரசன் கடமையும் உரிமையுமல்லவா? இங்ஙனம் புகழும் பொருளும் போற்றித் தழுவி வளர்ந்த காட்சியும் அங்கு காண்கிறோம்.

அறிவும் நீதியும் அகற்ற முடியாத பிணைப்புடையன. ஒன்றின்றி மற்றொன்று உயராது. பிசிராந்தையார் கூறுகையில், தனதுநாட்டில் நீதியுடைய அரசனும், ஆன்றவிந்தடங்கிய சான்றோராய் அறிஞரும் வாழ்வதாலேயே தனக்குக் கவலையென்பதே தெரியாது என்கிறார். இதனால் மக்கள் மகிழ்ச்சிமாறாது வாழ, நீதிமட்டும் போதாது; அறிவும் அதனுடன் இணையவேண்டும் எனவும், நீதியுள்ளவிடத்தேதான் அறிவும் வாழும் எனவும்; அவை இணைபிரியாத் தொடர்புடையன வெனவும் தெளிகிறோம். ஆம், 'தக்க இன்ன தகாத இன்னவென்று ஒக்க அறிதலே அறிவு' எனக் கம்பரும், 'தீதொரீஇ நன்றின்பாலுய்ப்பதறிவு' என வள்ளுவரும் கூறும்போதும் அங்கு தகாத நீங்கிய தக்கதும், தீதொரீஇய நன்மையும், 'நீதி'யை யல்லவா குறிக்கின்றன. அரசன் கடமையைக் கூறும் போதும் வள்ளுவர், 'அற[illegible] முக்கா தல்லவை [illegible]' குறிக்குகையில் அவனது நீதியுடன், அல்லவை நீக்கியறனைக் காக்கும் அறிவைப் பிணைப்பதைக் காண்கிறோம். இங்ஙனம் புறநானூற்று நாகரீகத்தில் அரசும் அறிவும் கலந்து நாட்டை நடத்தும் காட்சியே பெரிதும் பெருமை தருவதாகும். பிளேட்டோ தம் அரசியலில், 'ஞானியே ஓர்நாட்டின் தலைவனாக அமையவேண்டும். அப்போதே நாடு தனது முழு உரிமையின்பத்தையடையும் என்கிறார். அதைத்தான் இங்கு காண்கிறோம். அரசனே பேரறிஞனா யில்லாவிடினும் பேரறிஞராய் புலவரைத் தலைமையாக மதித்து அவர்தம் அறிவுரை வழி நாட்டை நடத்துகிறான். எத்தனையோ தமிழ் மன்னர் பேரறிஞரால் (புலவர்) திகழ்ந்துள்ளனர். இங்கு அரசற்குப் புலவன் உயிராயும், ஒளியாயும் அமைகிறான்.

நெல்லும் உயிரன்றே எனும் பாடலில், 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என, அரசனே நாட்டிற்குயிர் என்று கூறும் புலவன், அரசனுக்குத் தான் உயிர் என்பதனை 'யானுயிர் என்பதறிகை' என்பதால் உணர்த்துகிறான். உடலை உயிர் நடத்துகிறது. அவ்வுயிரையும் இறைவன் உயிர்க்குயிராய் நின்றுநடத்துகிறான். இக்கொள்கையையல்லவா, 'அரசனுக்குப் புலவன் தலைவன்' என உணர்த்தும் அப்பாடல் குறிக்கின்றது. மற்றும் அப்பாடலில் 'வேன்மிகுதானை வேந்தர்க்குக் கடன்' எனக்குறிப்பிடுவதிலிருந்து ஒருபெரிய உண்மை தெரிகின்றது. நீதியுடைய அரசன் வேல், வில் இவற்றால் நீதியை வாழ வைக்க முடியாது. ஆனால் அந்நீதியின் உண்மையான உயிர் அறிவே (புலவன்) என்பதல்லவா அச்சொற்களின் உள்ளம். இன்று அணுக்குண்டின் துணையால் உலகில் நீதியை நிலைப்பிக்கச் சூழும் மேலை நாடுகள் இத்தமிழ் நாகரீகத்தை யுணருமா?

ஏன், 'நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே' யென்ற மற்ற முதலடி குறிப்பது யாது? அரசன் நாட்டிற்கு வேண்டிய உணவும் நீரும் உதவி விடலாம். அவைமட்டும் நாட்டின் 'மனிதத் தன்மை'யைச் செழிக்கச் செய்யா. ஆனால் அதனைச் செய்வது மனித அறிவு ஒன்றுதான். ஆதலின் மன்னன் 'தீங்கில்லாத' நீதி செலுத்தினால் மட்டும் போதாது. ஆனால் அந்த நீதியில் அறிவு செழிக்கவேண்டும். மக்கள் அரசனது நீதியின் கீழ் அறிவினை யுயிராக மதித்து வளர்த்துக்கொள்ளவேண்டும். இத்தகைய உயர்ந்த உண்மையல்லவா இவ்வடி கூறுவது!

இவ்வண்ணம், அறிவு (புலவன்) செய்யும் நலன் அளப்பற்றது. ஆகையாற்றான் அரசன் புலவனை ஆண்டவனாக மதித்து அவருடன் நீங்கா நட்புகொண்டு வேண்டுவதெல்லாம் கொடுத்துதவுகிறான்.

அவ்வறிவும் வெற்றறிவா? இசை, காவியம், நாடகம் இவற்றோடுபட்ட கலையறிவாகும். கலையறிவே வாழ்க்கைக்குரியதாகும். வெறும் சர்க்கரையைத் தின்போமோ? ஏதேனும் ஒரு பொருளுடன் கலந்துதான் பயன்படுகிறது. அதுபோலவே அறிவு, இசை, நடம் இவையாகிக் கலையறிவெனப்பேர்.

பின்னரே 'உண்மை வாழ்க்கையை உயர்த்தும்'. கருமை, நீலம் இவற்றை வெறும் வண்ணமாகக் காண்பதினும் அவற்றை மேகத்திலும், கடலிலும் காணும்போது எவ்வளவு இன்பமும் பயனுமளிக்கின்றன. அதே போலத்தான் வெற்றறிவும், கலையறிவும். கலையறிவு மேகம், கடல்போல்வது, கலையறிவு நாட்டிற்கு எப்படிப் பயன்படும்? அரசன் அதை ஏன் விழையவேண்டும்?

திருக்குறளை அதிலுள்ள 'வாய்மை' என்ற அதிகாரத்தை அறிந்து திருந்துவது [illegible] இயலாததாகும். ஆனால் வாய்மையை வேதநாயகம்பிள்ளைக் கீர்த்தனை யிசைப்பதிலோ, அரிச்சந்திர நாடகத்தை இராசமாணிக்கம் நாடகத்திலோ காண்பதால் எவ்வளவு இன்புற்று அதில் மனதைப் பதித்துவிடுகின்றனர் மக்கள். அத்தகைய கலையறிவே உண்மை யொழுக்கத்தொடுபட்ட பண்பை வளர்ப்பது. அப்பண்புதான் ஓர் நாட்டின் நாகரீகத்தை யுயர்த்துவ தன்றி அறிவு மட்டில் உயர்த்தாது. வள்ளுவர்கருத்தும் இதுதான். இன்றுமேலநாடுகள் விஞ்ஞான அறிவில் விஞ்சி நின்றாலும், 'தமிழர் உயிரினும் ஓம்பிய ஒழுக்கத்தில்' மேம்படாதமையாற்றான் இன்று உலகில் மேலை நாகரீகம் வெறுத்தொதுக்கப்படுகின்றது. ஒழுக்கங் கெட்டவன் பேரறிஞனாயினும் மனிதனாக முடியாது. அவ்வொழுக்கததைக் கலையறிவே வதைக்கவல்லது. மனிதர் எதனை வாழ்நாள் முழுதும் தேடியலைகிறார்களோ அவ் வின்பத்தினை, அமைதியினைக் கலையே அளிக்கும் தன்மை நிறைந்ததாம். மணிவாசகப் பெருமான், ஆண்டவன் நிகழ்த்தும் நடனக் கலைபற்றி அன்பர் என்பூடுருகக் குனிக்கும், என்கிறார். இதில் கலை, மக்கள் உள்ளத்தையே யுருக்கி இன்ப வெள்ளம் பாய்ச்சும் நிலை கூறப்படுகிறது. அவரே இசை பற்றி, தீந் தமிழின் துறை வாய்ப்புகுந்தோ, அன்றி ஏழிசைச் சூழல்புக்கோ 'இத்தனை மெலிந்திருக்கிறாய், எனத்தலைவியின் காதலின்பம் நுகர்ந்து வந்த தலைவனை பாங்கன் கேட்குமுகமாகத் திருக்கோவையாரிலே கூறலால், இசை, கேட்போர் ஆற்றலையெல்லாம் தன் மயமாகவே ஆக்கிவிடலால், அவர் உள்ளம் வேறுவழி செல்ல வியலாமையும், அந்நிலையே ஒரு பேரமைதியைத் தருவது என்பதனையும் விளக்குகின்றது. மனிதனின் ஆற்றலெல்லாம் ஒரே நெறியில் ஒடுங்கும்போது தானே 'பேரமைதி.'

உலகில் கலைப்பேரறிஞர்களாய ஆனந்த குமாரசுவாமி, பெர்னாட் ஷோ முதலியோர் கலைபற்றி வெகுவாகப் புகழ்ந்து கூறுகின்றனர்.

> கலைஞன் அழகைப் படைக்கும் ஆண்டவன் குழந்தை. தலையானது இரக்கம் நீதி இவைபற்றிய வொழுக்கம், தன்மைகள் இவற்றைச் சீராக்கவேண்டும்.
>
> —பெர்னாட் ஷோ

> தலையழகு இல்லாவிடத்து நீதிநெறியில்லை. நீதிநெறியுள்ள விடத்தே கலைவளரும், நாகரீகம் வாழ்க்கை நலன்களைப் பெருக்குவதில் அல்ல, வாழ்க்கைப் பண்புகளை உருவாக்குவதிலேயே விளக்கமுறும்.
>
> — ஆனந்தகுமாரசாமி

ஆண்டவன் அறம், ஞானம் இவற்றின் வடிவானவன். அறந்தானே நீதி. ஆகலின் ஆண்டவனின் இரண்டு சிறப்பான தன்மைகளே உலகை நடத்துவதற்காகப் புலவனாகவும் அரசனாகவும் பிறக்கின்றனவெனலாம். ஆகலாற்றான் அவை இணையறாவியல்பினவாய் உள்ளன. காதலனும் காதலியும் ஒருயிராம். ஏன் இரண்டு உருவமெடுத்தனர்? ஒரே உருவத்தில் இன்பம் நுகர முடியாது. சர்க்கரையும் உண்போனும் ஒன்றாயிருந்தால் இன்பம் காண்பதுயார். முடியவும் முடியாதல்லவா? இதனை அழகாக வெளிப்படுத்தும் மணிவாசகப் பெருமான் தமது திருக்கோவையாரில்:

''ஆனந்தவெள்ளத்தழுந்துமோர்
ஆருயிர் ஈருருக்கொண்டு
ஆனந்தவெள்ளத்திடைத்
திளைத்தாலொக்கும்''

என இன்பங்கனியப் பாடுகிறார். இங்ஙனமே மக்கட்கு இன்பம் (அ) அமைதியெனும் ஓரே உயிருடைய ஈருடல்கள் எனலாம் 'அறிவு நீதி'யாய இவற்றின் இணைந்த உறவினை நன்று, அரசன் புலவனை விழைகிறான். புலவன் அரசனை ஏன் அத்தனை விரும்ப வேண்டும். அறிவுக்கு அரணும், கலைக்குக் காவலும் அரசனை (அரசு) யன்றிவேறு யார்? அந்தணர் நூலுக்கும் அறத்திற்கும் ஆதியாய் நின்றது மன்னவன் கோல் அல்லவா? இதனாற் கலையைக் காக்கும் கடன், அறமே வாழ்வாக் கொண்ட அறிவைப் போற்றி வளர்க்கும் ஆர்வம் அரசனாலேதான் முடியவேண்டும் என்பதே குறள்.

அறிவு, கலையென்னும் உயிருக்கு உடலாவது நீதியே (அரசன்). அதனாலேதான் புலவன் அரசனின் வீரம் கொடை இவற்றைப் புகழ்ந்துபாடி அவன் பெருமையை உலகமுழுதும் பரப்புகிறான். இங்ஙனம் அறிவும் நீதியும் இணைந்து புறநானூற்றுத் தமிழகத்தை வாழ்வித்ததென்றால் அது இன்றைய உலகால் பின்பற்றத்தக்கதாகும்.

---

## பூமி திருத்தியுண்

சாரதா

1. வெண்ணணதன் வீட்டிலி ருக்கநெய்—பிறர்
வீட்டி லிரக்கிற பேரென—சிறை
பண்ணணநம் நாட்டி லிருக்கவும்—துதி
பாடிப் பறந்துண வேற்கிறோம்!

2. நெல்லரி சிக்கழ தேங்குவோம்—நிலம்
நீண்டு கிடப்பது காண்கிலோம்—இனும்
புல்லடி மைத்தொழில் பேணுவோம்—எனல்,
பூமி திருத்தியுண் பாரெவர்?

3. கோழிகள் மேய்க்கிற வேலையும்—பெறக்
'கோறண மேந்'தினுக் கோடுவோம்—உயர்
மேழி பிடித்துழும் வேலைகள்—செய
வேம்பெனப் பின்னடை கின்றதேன்?

4. நாட்டுத் தொழில்களைப் பேணிடும்—குணம்
நம்மவர்க் கில்லையிந் நாளிலே—பணம்
கூட்டிக் குவிக்கிற வேலைகள்—பெறக்
குட்டிக் கரணமும் போடுவோம்!

5. ஈழத் துணவுபு கார்முதல்—பல
இந்திய நாடுகட் கேற்றிய—பழங்
காலப் பெருமைகள் பேசுவோம்—கமக்
காரர்க் குதவிடக் கூசுவோம்!

6. இந்தக் கெடுமதி போம்வரை—நம(து)
ஈழந் தலையெடுக் காதடா—கமம்
நிந்தைத் தொழிலல; இன்றுதொட்(டு)—அது
நீண்டு தழைத்திட வேண்டுமே!

7. காட்டை அழித்திட வேண்டுமே—குழம்
கட்டித் திருத்திட வேண்டுமே—நமர்
தோட்டத் தொழில்செயும் சூரராய்— அதைத்
தொட்டுச் செழித்திட வேண்டுமே!

# ஈழகேசரி

சுன்னுகம்: விய, ஆனி ௩௦

## இலங்கையிலுள்ள இந்தியர்

இலங்கையில் வசிக்கும் இந்தியரைப்பற்றிய விவகாரம் சென்ற ஐந்தாறு வருடங்களாக விவாதிக்கப்பட்டும், இன்னும் ஒரு முடிவுக்கு வந்தபாடில்லை. நாளாந்தரத்தில் இவ்விஷயம் அதிக சிக்கலாயும் மிக்க மனவிசாரத்தையும் ஆத்திரத்தையும் உண்டுபண்ணுவதாயும் சென்றுகொண்டிருக்கின்றதேயன்றி, ஒருவித சமரசத்தையடைந்து இரு நாடுகட்கிடையில் ஒற்றுமையையும் நட்பையும் நிலைநாட்டுவதாகக் காணோம். சென்ற ஒரு மாதகாலமாக எண்பத்தையாயிரம் இந்தியக் கூலிகள் வேலை நிறுத்தஞ் செய்தமையால், தோட்டப்பகுதிகளின் வேலைகள் யாவும் நடவாது தடைப்படலாயின. இதனால் ஏற்பட்ட நட்டமும் மனஸ்தாபமும் இம்மட்டன்று. உருளிவெள்ளி யென்னும் தோட்டத்தை அரசினர் விலைக்குப்பெற்று, அத்தோட்டத்தில் வசித்துவந்த இந்தியக் கூலிகளை வெளியேற்ற முயன்றதே எல்லாக் கலகத்துக்குங் காரணமாயது. நிற்க,

இப்போது, இலங்கையின் அரசியற்றலைவராக அதிஷ்டவசமாக விளங்கும் கௌரவ சேனநாயக்கா அவர்கள், இந்தியர்மாட்டுக் கொண்ட துவேஷமே எல்லாத் தகராறுகளையும் ஒருங்கு வருவித்ததென்பாம். எப்படியாவது இந்தியர் யாவரையும் இலங்கையினின்று வெளியேற்றிவிடவேண்டுமென்பது இவரது அடிப்படையான கொள்கை. இலங்கையிலுள்ள இந்தியர்க்கு அரசியற் சுதந்திரத்தை வழங்கும் விஷயமாகவும் மிக்க சிக்கல்கள் ஏற்பட்டுவிட்டன. தோட்டப்பகுதிகளில் : வேலைசெய்யும் இந்தியர்க்கு வாக்குரிமை வழங்கும் விஷயத்தில் இச்சிங்களத் தலைவர் மிகப் பிடிவாதமாக முரண்பட்டு நிற்கின்றனர். இலங்கையின் விருத்தியில் ஓரளவுக்குப் பங்குபற்றி வந்த இந்தியர்க்கு அவர்களது தகுதிக்கும் உரிமைக்கும் ஏற்ப நாம் சிற்சில சிலாக்கியங்களை அளிப்பின், அதனால் என்ன தீமைதான் வந்துவிடுமோ? இந்தியர்மாட்டு இவர்க்கு நீங்காத் துவேஷம் ஏன் ஏற்பட்டதோவென்று நாம் கவல்கின்றோம். இவரையும் வேறு சில சிங்களத் தலைவர்களையும் பின்பற்றி சாதாரண சிங்கள மக்களும் இந்தியர்மாட்டு அளவு கடந்த துவேஷம் பாராட்ட ஆரம்பித்துவிட்டனர்.

விரைவில் பூரணசுதந்திரத்தை அடையப்போவதும் அயலிலிருப்பதுமாகிய இந்தியாவின் நட்பினையும் துணையையும் நாடாது, கௌரவ சேனநாயக்காவும் அவரின் தோழர்களும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் அளவு கடந்த நம்பிக்கைவைத்து மனப்பால் குடிக்கின்றனர். "இந்தியாவிலிருந்து ஒருபிடியரிசியாவது நாம் இதுவரையில் பெறவில்லை" என்று இச்சிங்களத் தலைவர் துணிவுடன் கூறினாரல்லவா? இந்தியாவிலிருந்து உணவுப் பொருட்கள், புடவை, முதலியன கிடையாவிடின், நம் நிலை யாதாய் முடிந்திருக்கும்? சரக்குவகைகள் சிறுதானியங்கள் முதலியன இதுவரையில் வேறெந்த நாட்டிலிருந்து வந்தனவோ? இவரின் போலிக் கூற்றினை இந்தியப் பிரதிநிதியாகும் திரு. M. S. ஆனே, மிக்க ஆதாரத்துடன் கண்டித்துள்ளார். பிரிட்டிஷாரே தமக்கு என்றும் துணையாக நிற்பாரென வீணுக மனப்பால் குடிக்கின்றனர். சாதி, சமயம் பழக்கவழக்கம், நாகரீகமென்பனவற்றில் மிகமிகத் தொடர்புடைய இந்தியாவினை வெறுத்து, எத்தனை நாட்களுக்குச் சீருடன் வாழ முடியும்? இவராலும், இவருடைய கொள்கைகளை அனுசரிக்கும் சிங்களப் பத்திரிகைகளாலும் ஏற்படும்தீமைகள் இம்மட்டன்று.

இலங்கையில் வாழும் ஐரோப்பியராகும் வெள்ளையர்கட்கு இவர் போதிய உரிமைகளை வழங்க முற்படுவதும், மிக்க நெருங்கிய தொடர்புடைய இந்தியரைவிரட்டிவிடப் பார்ப்பதும் நுணுகி நோக்குங்கால், அவைநற்கால அறிகுறிகளாகா. இவருடைய தலைமையில் நம்நாடு உயர்நிலையையடையுமெனஎண்ணுவதும் பிழையாகவே தோன்றுகின்றது. மேலே காட்டிய உருளி வெள்ளி என்னும் தோட்டம், அரசினரால் ஏழைகளைக் குடியிருத்தும் பொருட்டு விலைக்கு வாங்கப்படின், இதுவரையும் அங்குவேலை செய்த இந்திய மக்களுக்கு வேறு இடத்தில் வேலைபெற்றுக் கொடுக்க வேண்டாமா? அன்றியும் இத்தோட்டத்திற் குடியேறுதற்கு வேண்டிய நிலம் இந்தியர்க்கு அரசினர் வழங்கவேண்டாமா? இலங்கை அரசாங்கப் பணத்தைக் கொண்டே இத்தோட்டம் வாங்கப்படுகின்றது. அவ்வரசாங்கப் பணத்துக்கு இந்தியரும் உரிமையுடையாரன்றோ. இத்தோட்டத்தில் வேலை நடத்திய ஆயிரக்கணக்கான இந்தியரைத் தெருவில்விட, இந்திய அரசினர் பார்த்து நிற்பாரா? பெரிய நாடாகும் இந்தியாவுடன் சிங்களத் தலைவர்கள் அவசியமின்றி முரண்பட்டுத் துவேஷமடையின் இறுதியில் பெருநட்டமே வந்தெய்தும்.

இப்பொழுது இலங்கையில் ஏற்பட்ட தகராறுகளை விசாரணை செய்ய இந்தியக் காங்கிரஸ் சபையினர் ஓர் நிர்வாக சபையினை அமைத்துள்ளார். அது பண்டிதர் நேருவின் தலைமையிலேயே ஏற்பட்டுள்ளது. இச்சபையினருடன் இலங்கையரசினர் கலந்தாலோசித்து ஒரு முடிபுக்கு வருவாராயின், இருநாடுகட்கும் நற்காலம் வந்ததென்றே கூறுவாம். இலங்கைவாழ் இந்தியர் விஷயமாக இந்தியாவில் எவ்வித அபிப்பிராயபேதமுங் கிடையாது. ஆகையால், மிக்க ஆதிக்கம் படைத்த இந்திய காங்கிரஸ் பிரதிநிதிகளுடன் ஒருவித சமரசத்தை இப்போது செய்துகொள்ளின், அதுவே பின் சுதந்திரம் பெற்ற இந்திய அரசினரது கொள்கையுமாகுமெனத் தேர்ந்துகொள்ள வேண்டும். அத்துடன் கௌரவ சேனநாயக்காவின் மனப்பான்மையும் மாற்றமடைய வேண்டும். பிரிட்டிஷ் எசமானர்கள் மீது அளவுகடந்த நம்பிக்கையும் விசுவாசமுங் காட்டுவதைக் குறைத்து, இந்தியரோடு இணக்கமடையச் சித்தங்கொள்ளவேண்டும். சிங்களர்க்கு மாத்திரம் இலங்கை சொந்தமன்று. தமிழர்கள், இந்தியர், முஸ்லீம்கள் முதலியோர் இலங்கையைச்சொந்தமாகக் கருதிப் பொறுப்புடன் வாழ்கின்றனர். இவர்கள் யாவர்க்குஞ் சமஉரிமையளிப்பதே முறை. அதைவிட்டுச்சிங்களரை மாத்திரம் ஈடேற்றவேண்டுமென முனைந்து நிற்பின், இலங்கை மீட்சியடையப் போவதில்லை யென்று திடமாகக் கூறுவாம்.

### இலங்கை இந்தியர் வாக்குரிமை

புதிய அரசியல் திட்டத்தின் கீழ் இலங்கையிலிருக்கும் இந்தியத் தொழிலாளிகளின் தற்போதைய வாக்குரிமை ஏற்பாடுகள் மாற்றப்படமாட்டாதென குடியேற்றநாட்டு மந்திரி பொது மக்கள்சபையில் கூறினார்.

இலங்கை அரசாங்கத்துக்கும் இந்திய அரசாங்கத்துக்குமிடையே நேரடியான அரசியற் பேச்சுவார்த்தைகளை நடத்துவதன் மூலம் வாக்குரிமை ஏற்பாடுகளில் எதிர்காலத்தில் மாற்றங்களைக் கொண்டுவரலாமென அவர் மேலும் கூறினார்.

# பாதை ஓரத்தில்

★

## பாட்டைசாரி

இலங்கையின் பல பாகங்களிலும் கடந்த புதன்கிழமை ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டது. சகல ஆசிரியர்களும் ஒன்று சேர்ந்து கௌரவமான முறையில் அரசாங்கத்தை எச்சரித்திருக்கின்றனர். புதிய சம்பளத் திட்டம் ஆசிரியர்களுக்கு விளைத்திருக்கும் அநீதியைக் கண்டிப்பதற்காகவே இந்த ஏற்பாடு. சிறந்த முறையிற் கல்வியூட்டுவதற்குத் திறமை வாய்ந்த ஆசிரியர்கள் இப்போது மருந்துக்குமில்லை. இந்த லட்சணத்தில் ஆசிரியர்களின் சம்பளமும் மகாமோசமாவதாகில் அப்புறம் இலங்கையைக் கடவுள்தான் காப்பாற்றவேண்டும்.

### அங்கோடை அதிதி

கொழும்பில் நிகழ்ந்த அகில இலங்கை ஆசிரியர்கள் கூட்டமொன்றில் ஒருவர் பேசியிருப்பதைக் கவனிக்கும் போது ஆசிரியர் பஞ்சம் உச்சநிலையை எட்டி வருகின்றதென்பது விளங்கும். குறித்த பேச்சாளர் பள்ளிக்கூட மனேஜராவார். இவர் ஓர் ஆசிரியர் வேண்டியிருப்பதாக விளம்பரஞ் செய்தபோது ஒரே யொருவர்தான் விண்ணப்பம் அனுப்பியிருந்தாராம். இந்த ஆசிரியர் சிறிது காலமாக அங்கொடை ஆஸ்பத்திரியில் அதிதியாயிருந்து சிகிச்சை பெற்றார் என்று தெரிகின்றது. வாசகர்கள் இதை நம்பத்தான் வேண்டும். ஏனெனில் கத்தோலிக்கக் குருவானவர் ஒருவர்தான் இப்படிப் பகிரங்கமேடையினின்றும் பேசியிருக்கின்றார்.

### சித்திர ஆசிரியர்கள்

வட இலங்கைச் சித்திர ஆசிரியர்களும் தங்களுக்கு விதித்திருக்கும் சம்பளம் போதாதெனக் கருதுகின்றனர். கடந்த வாரம் இவர்கள் யாழ்ப்பாணத்திற் கூடிக் கல்வி அதிகாரிகளுக்கு ஓர் அறிக்கை சமர்ப்பிக்கவேண்டுமெனத் தீர்மானித்திருக்கின்றனர். வாழ்க்கையைச் சோபிக்கச் செய்வது கலை, இத்துறையிற் சித்திர ஆசிரியர்களும் தங்கள் பங்கை உதவி வருகின்றனர். அவர்களின் நியாயமான கோரிக்கையை அரசாங்கம் கவனிக்க வேண்டும். அத்துடன் அகில இலங்கை ஆசிரியர்கள் சங்கமும் வேண்டிய உதவி செய்ய முன் வருவது அவசியமல்லவா?

### ஸ்ரீ முல்க் ராஜ் ஆனந்தர்

கலையைப்பற்றித் தொட்டதுந் தொடாததுமாகப் பேசும் போது ஈழத்துக்கு விஜயஞ் செய்யவிருக்கும் எழுத்தறி புலவன் முல்க் ராஜ் ஆனந்தர் அவர்களின் ஞாபகம் வருகின்றது. ஆங்கில எழுத்தாளர்களின் மதிப்பையும், கண்ணியத்தையும் பெற்று வரும் டொக்டர் ராஜ் ஆனந்தர் இந்தியக் கலாசாரத்தில் சுவை காண்பவர். பாரதநாட்டுப் பழங்கலைச் செல்வத்தை உலகறியச் செய்வதில் இன்பம் அனுபவிப்பவர். புதுமை இலக்கியம் சமைப்பதிற் கைவரப்பெற்ற இவ்வாசிரியரின் விபரமான வரலாற்றை அடுத்தவார ஈழகேசரியிற் படிப்பீர்கள். சிறந்த நவயுக எழுத்தாளனை ஈழநாடு வாழ்த்துகின்றது.

### சுண்டங்காய்ப் பத்திரிகை

கலைஞன் ஒருவரைப்பற்றிப் பெருமை பாராட்டும் போது தெப்பக் குளத்தில் ஓர் துறையிலிருந்து வெளிவரும் சுண்டங்காய்ப் பத்திரிகையின் அழுகுரல் கேட்கின்றது.

இப்படியும் ஒரு பத்திரிகை தமிழ் நாட்டில் உலாவுகின்றதென்பதை இடையிடையே அறிவிப்பதற்கு அப்பத்திரிகை கையாளும் முறைகளைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. இரத்தமற்ற மூட்டைப் பூச்சிகளுக்கும் மனிதரை எதிர்க்கும் சக்தி இருக்குமாகில் இந்தச் சுண்டங்காய்ப் பத்திரிகைக்கும் அச்சக்தி இருக்கத்தான் செய்யும். அது வாழ்க!

### ஊரெழுப் போக்கணை

நிலாவரைத் திட்டத்துக்கு அடுத்தபடியாக ஊரெழுப் போக்கணை யாழ்ப்பாண மக்களுக்குக் கிடைத்திருக்கின்றது. இந் நீர்நிலைமூலம் நீர்ப்பாய்சுவதற்கான ஒழுங்குகள் கடந்த திங்கட்கிழமை ஏற்பாடாகியிருக்கின்றன. உதவி மாகாண அதிபர் திரு ம. ஸ்ரீகாந்தா பொதுமக்களின் சார்பில் நீர்ப்பாய்ச்சுதலை ஆரம்பித்து வைத்திருக்கின்றார். இதன் மூலம் உரும்பராய், ஊரெழு, சுன்னுகம் முதலிய கிராமங்களுக்கு நீர்ப்பாய்ச்ச முடியுமெனத் தெரிகின்றது. 'போக்கணை' இராமபிரானின் திருவடிகள் பட்ட இடமென மக்கள் பேசிப் பெருமைபாராட்டி வருகின்றனர். இன்று இந் நீர்நிலை இக்கிராமத்தைச் சுற்றியுள்ள மக்களும் 'ஜிவநிதி' யாகவும் அமைந்து விட்டதே!

### "வெல்லிங்டன்"—ஸ்ரீவள்ளி

வள்ளிதிருமணம் ஒரு புராணக்கதை; பழங்கதை. அதை மேடைகளில் நடித்தார்கள். சலனப்படமாகவும் காட்டினார்கள். வெள்ளித்திரையிலும் ஓடச் செய்தார்கள். இப்போது ஸ்ரீவள்ளி என்ற பெயருடன் வெள்ளித் திரையில் மீண்டு பிரகாசிக்கின்றது. மகாலிங்கமும் குமாரி ருக்மணியும் அற்புதமாக நடித்து அப்படத்துக்குப் புதுமெருகு கொடுத்திருக்கின்றனர். நடனமும் சங்கீதமும் சிறப்பாக அமைந்திருக்கின்றன. இப்படம் இப்போது யாழ்ப்பாணம் வெல்லிங்டன் படமாளிகையில் காட்டப்படுகின்றது. ஜனங்கள் திரள் திரளாகச் செல்லுகின்றனர்.

அடுத்ததாக சாந்தாராம்—சகுந்தலா—வெல்லிங்டனுக்கு விஜயஞ் செய்கின்றார். மகாகவி காளிதாசனின் இக்காவியச் சித்திரம் ஈடு இணையற்ற முறையிலே தயாரிக்கப்பெற்றிருக்கின்றது.

# ஊழியன் உளறல்

வழக்கம்போற் கடந்தவாரத்து ஹிந்துஸ்தான் இதழைப் படித்துக்கொண்டிருக்கையில் துறையூர்ப் பத்திரிகை யொன்று முச்சந்தியில் நின்று இலங்கை 'ஈழகேசரி'யைத் தாக்கிய செய்தியையும் ஹிந்துஸ்தான் மூலம் அறிந்தோம்.

* * *

எங்கள் காரியாலயத்துக்கு மாற்றுப் பத்திரிகைகள் பல வருவதுண்டு. சிலவற்றை நாம் உடைத்துப் பார்ப்பதேயில்லை.

* * *

குறித்த துறையூர்ப் பத்திரிகையின் ஆசிரிய பீடத்தை கு. ப. ரா., திருலோகசீதாராம் ஆதியோர் அலங்கரித்த காலத்தில் அப்பத்திரிகையை இலக்கிய நண்பர்கள் படித்துவந்தார்கள். அப்பெருமை இப் பத்திரிகைக்கு இப்போது சிறிதளவேனும் இல்லை. ஹிந்துஸ்தான் ஆசிரியரின் குறிப்பு எமது 'ஆபீஸ் பைய'னுக்குச் சிரமத்தைக் கொடுத்ததுமன்றி எம்மையும் அத்துறையூர்ப் பத்திரிகையைத்தட்டிப்பார்க்கச் செய்தது. அதிற்களவாணித்தனத்தைப்பற்றி இரைந்துவிட்டுத் 'தேயிலைத் தோட்டத்திலே கொழுந்தெடுக்கும் கன்னி' மீது துள்ளிப் பாய்கின்றார் தெருப் பிள்ளையார். பத்திரிகைக் கௌரவத்துக்குத் தீங்குவந்துவிட்டதெனவும் அலறுகின்றார். கதிரேசன் என்பவர் 'ஈழகேசரி'க்குச் சில மாதங்களுக்கு முன்னர் அனுப்பிவைத்த கவிதையைத் துறையூர்த் தம்பிரானின் அனுமதியின்றி நாம் பிரசுரித்தது தவறும்!

இலங்கை வந்த திருலோக சீதாராம், குறித்த கவிதையைப் பாராட்டிப் பேசியதேயில்லை. யாழ்ப்பாணம் சோமசுந்தப் புலவரின் கவிதை ஒன்றைத்தான் அழகாகப்பாடினார். 'பிரஸ்தாபக் கவிதையைக் கட்டம் கட்டி வெளியிட்ட'தாகக் கனவு காண்கின்றது துறையூர்த்தாள்.

இப்பத்திரிகை, பணத்தை விழுங்குவதுமன்றி உயிரையும் பிடித்துக் கொண்டிருப்பதைப் பட்டணவாசிகளுக்குப் பகிரங்கப்படுத்துவதற்கு இப்படித்தான் 'தீவிளிக்குத் தீவிளி' தேங்காய் உடைப்பதாக அறிகின்றோம்.

ஈழகேசரிக்கு ஒருவர் கவிதை அனுப்புகின்றார்: அதை நாம் பிரசுரம் செய்வதற்குத் துறையூர்ப் பத்திரிகைக்கு எழுதிக் கேட்கவேண்டுமாம். எப்படியிருக்கின்றது இலக்கிய டம்பாச்சாரியின் கேள்வி.

தமிழ்நாட்டுப் பத்திரிகைகளுட் சில, நல்ல விஷயங்களுடன் வெளிவருவதுண்டு. ஆகவே, நல்ல பத்திரிகைகளிற் காணப்படும் சிறந்த கட்டுரைகளை இலங்கை வாசகர்களுக்காக இடையிடையே பிரசுரித்து வருகின்றோம். நாம் உயிர் வாழ்வது தமிழ் நாட்டுப் பத்திரிகைகளை நம்பியல்ல. ஆனால் சில தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் இலங்கையின் தயவில் மூச்சுவிடுகின்றனவென்பதை நாம் துணிந்து கூறுவோம்.

பீரங்கி என்று நம்பிப் பொம்மைத் துப்பாக்கி தாங்கி முச்சந்திகளில் 'ஒல்லிப்பிள்ளை' ஒன்று எதற்காக மினைக்கெடுகின்றதோ தெரியவில்லை. குறித்தசில எழுத்தாளர் மீது கொண்டுள்ள துவேஷத்தையும், தமது தோல்வி மனப்பான்மையையும் பொருமையையுங் காரணங்களாகக்கொண்டுஅவர் உளறுகின்றாரா என்ன? பத்திரிகை ஆசிரியர் பதவியை அப்பிக் கொள்வதற்குச் சிலர் கையாளும் முறைகள் அருவருப்பானவை. [சொல்ல வெட்கமாயிருக்கின்றது.]

சுவர்க்கவாசி கு. ப. ரா, அவர்களின் பெயரைச் சொல்லி ஒருமாதிரிப்பூசிமெழுகிக்காலங்கழிக்கின்றதுஅத்துறையூர்த்தாள். இத்தகைய பத்திரிகைகள் இன்னும் உயிருடன் வாழ்வதாகில் "இலக்கிய வளர்ச்சியை" மாமாங்கத்துக்கு மாமாங்கந்தான் எடைபோட வேண்டும்!

தவிர, இம்'மாதமிருமுறை'யின் பல்லவி அனுபல்லவி சரணங்கள் நிரவல் சில்லறைகளைத் தமிழ் நாடு நன்கறியும். பத்திரிகை என்று சொல்லிக்கொள்வதற்குத் தானும் இப்போது அருகதையற்ற இதன் போக்கை எமக்கு எடுத்துக்காட்டிய ஹிந்துஸ்தான் ஆசிரியருக்கு எமது நன்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக விவகாரம்

# வல்லரசுகளின் அநீதி

## சீனத்துக்கு அவமதிப்பு

### ருஷியா பிடிவாதம்

உலக சமாதான மகாநாடு இம்மாதம் 29-ந்திகதி பாரிஸ் நகரில் நிகழவிருக்கின்றது. இதில் 21 தேசங்கள் கலந்துகொள்ளும். பிரான்ஸ் தேசம் ஒரு வல்லரசு என்ற முறையில் 21 தேசங்களுக்கும் தந்திமூலம் அழைப்புகள் அனுப்பியிருக்கின்றது.

அயல்நாடு மந்திரிகள் மகாநாட்டில் நான்கு வல்லரசுகளும் சமாதான மகாநாட்டைக் கூட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்துகொண்டவிடத்தும் இமயம்போன்ற ஒரு தவறையும் விளைத்திருக்கின்றனர். ஐரோப்பாவில் அச்சு நாடுகளை எதிர்த்துப் போராடிய 21 குட்டி நாடுகளுக்கும் அழைப்புகள் அனுப்பியிருக்கும் நான்கு வல்லரசுகளும் சீனத்தை ஒரு மூலையில் ஒதுக்கிவிட்டிருப்பது இழிவான செயலாகும்.

சீனத்தைச் சமாதான மகாநாட்டுக் அழைக்கக்கூடாதென ருஷிய அந்நியநாட்டு மந்திரி மொலொட்டோவ் ஆரம்பத்திலிருந்தே ஒற்றைக்காலில் நின்றிருக்கின்றார். மொலொட்டோவின் பிடிவாதத்துக்கு ஏனைய வல்லரசுகளும் அடிபணிந்துவிட்டன. சமாதான மகாநாட்டிலே சீனத்துக்கு இடம் இல்லையென்றால் வேறு எந்த நாடுதான் அங்கு கௌரவமாக வீற்றிருக்கத் தகுதி வாய்ந்ததோ தெரியவில்லை. சீனத்துக்கு விளைத்திடும் இத்தவறு வல்லரசுகளின் கௌரவமற்ற போக்கை உலகுக்கு நன்கு உணர்த்தியிருக்கின்றது. ஐரோப்பாவிற் சதா உதைவாங்கி நொந்து கெட்டிருக்கு பிரான்ஸ், நான்கு வல்லரசுகளின் சார்பில் சமாதான மகாநாட்டுக்கு அழைப்பு அனுப்பும் யோக்கியதையைப் பெற்றிருக்கின்றதென்றால் அப்புறம் வேறு என்ன சூழ்ச்சி தான் அரசியற் சதுரங்கத்தில் நிகழமுடியாது.

சாதிநிறப் பூசல்களை கடந்து நிற்கும் தேசம் உலகிலே ஒன்று இருக்குமாகில் அது ருஷியாதான் என்ற நம்பிக்கையை மொலொட்டோவின் நடத்தை பொடிப் பொடியாக்கியிருக்கின்றது. இன்று ஆசியாவில் ஒரு வல்லரசாகக் கருதக்கூடிய நாடு சீனம் ஒன்றுதான். உலக வல்லரசுகளுடன் சரிநிகராக நிற்கக்கூடிய வன்மையும் இதற்குண்டு. அச்சு வல்லரசுகளின் அக்கிரமத்துக்கு ஆரம்பித்திலிருந்தே சீனம் ஆளாகிவந்திருக்கின்றது. அந்தக்காலத்தில் சீனத்துக்குப் போதிய படைப்பலமோ பணப்பலமோ இருந்ததில்லை. ஐரோப்பிய நாடுகளின் உதவி எதுவுமின்றி வீரப்போர் புரிந்த சீனத்தை அகில உலகமும் போற்றிப் புகழ்ந்தது. அமெரிக்காவும் பிரிட்டனும் ருஷிய அந்நிய நாட்டு மந்திரியின் முகத்துக்கு அஞ்சி சீனத்தைக் கைவிட்டது நன்றி கெட்ட செய்கையாகும். செய் நன்றி கொன்றவர்களுக்கு ஒருபோதும் உய்வு கிடைக்கப்போவதில்லை. இம்மூன்று வல்லரசுகளும் ஏதோ வெட்டி வீழ்த்திவிட்டமாதிரிப் பேசிக்கொள்ளுகின்றனர். மகாநாடுகள் கூடிப் பரஸ்பர துதிகளும் செலுத்திக் கொள்ளுகின்றன. ஆனால் ஆண்டுக் கணக்காக அதிகார வர்க்கத்தின் அக்கிரமச் செயல்களைச் சகித்து அந்நிய ஆட்சிக்குத் தலைவணங்காது நிற்கும் ஒரு சரித்திரப் பெருமை வாய்ந்த நாட்டை, மொலொட்டோவ் சமாதான மகாநாட்டிற் சந்திப்பது கௌரவக் குறைவெனக் கருதுகின்றார். சீனத்தின் உள்ளத்தைப் புண்படுத்துவதே சமாதான மகாநாட்டின் நோக்கமானால் இந்த மகாநாடு உருப்படியான காரியத்தைச் செய்து முடிக்கப் போவதில்லையென்று இப்போதே கூறிவிடலாம்.

ருஷியாவுக்குச் சீனத்தின் மீது கோபம் இருக்கத்தான் செய்கின்றது. ஏனெனில் சீனத் தலைவர் ஷியாங்கை ஷேக் அவர்களுக்குக் கொம்யூனிஸ்டுகளின் போக்குகள் கட்டோடு பிடிப்பதில்லை. சீனத்துக் கொம்யூனிஸ்டுகள் செய்யும் அக்கிரமங்களை அவர் சொந்தக் கண்கொண்டு பார்த்திருக்கின்றார். ஆகவே தீவிர பொதுவுடைமைக்குச் சீனத்துத் தேசிய அரசாங்கம் ஆதரவு அளிக்க மாட்டாரென்பதை மொலொட்டோவ் நன்கு தெரிந்துகொண்டார். சீனத்துக் கொம்யூனிஸ்டுகளுக்குப் பலந் தேடுவதற்காக ருஷியா, சீனத்து உள்நாட்டுக் கலகத்தை தீவிரமாக்குவதில் முனைந்துகொண்டிருக்கின்றது. கிடைக்குஞ் சந்தர்ப்பங்களைச் சொந்த நலத்துக்காக பயன்படுத்திக்கொள்வதில் ருஷியாவை பிரிட்டன் அமெரிக்கா போன்ற நாடுகள் கூட உச்ச முடியாது.

ஆசியாவின் சீனம் சுதந்திரமாக வாழ்வதை ருஷியா விரும்பமாட்டாது. சீனம் தலையெடுக்குமாகில் இந்தியாவும் அதனுடன் ஒத்துழைக்கும் என்ற திகில் ருஷியாவுக்குச் சதா இருந்துவருகின்றது. கீழைத் தேச நாடுகள் ஐக்கியமாக வாழ்ந்தால் அங்கு ருஷியா வால் ஆட்டுவது எங்ஙனம்? இதற்காகத் தான் சீனத்தைச் சமாதான மகாநாட்டுக்கு அழையாமல் அதைஓர் மூலைக்குள் ஒதுக்கியிருக்கின்றார் மொலொட்டோவ் ஆசியாவிலே ஆதிக்கம் வகிக்கவேண்டுமென்ற அவா ருஷியாவுக்கு இருப்பதால் அதற்கான வேலைகளை இப்போதே செய்யத் தொடங்கிவிட்டது.

சீனத்தைச் சமாதான மகாநாட்டுக்கு அழைத்திருந்தால் வல்லரசுகளுக்குக் கீழைத் தேச மக்களின் நன்மதிப்பு ஓரளவுக்குக்கிடைத்திருக்கும். உலகமும் அவர்களைக் கண்ணியப்படுத்தியிருக்கும். மொலொட்டோவின் சின்னத்தனம் ருஷியாவுக்கே இழுக்கை உண்டாக்கியிருக்கின்றது. அத்துடன் ஆரம்பத்திலிருந்தே ருஷியாமீது அவநம்பிக்கை கொண்டிருக்கும்இந்தியாவுக்கு மொலொட்டோவின் நடத்தை கசப்பை அதிகரித்திருப்பதுடன் ருஷியாவின் ஆதிபத்திய நோக்கத்தையும் வெட்ட வெளிச்சமாக்கி யிருக்கின்றது.

—இ. அ.

# கண்விழித்த காஷ்மீர்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டாமா? எவ்வளவோ முன்னேற்றமடைய இச்சமஸ்தானத்துக்கு இடமுண்டு. போதிய ஆறுகளும் அவைகளில் நீர் வீழ்ச்சிகளும் உள. மின்சாரசக்தி வேண்டியளவு பெறலாம். இங்கே கைத்தொழில் முதலியன விருத்தியடையவும் போதிய வசதிகள் உள. குளிர்ந்த சாந்தமான கால சுவாத்தியம் தொழில் நிலையங்களில் வேலை செய்வோர்க்குப் பெரிதுந் துணையாயுள்ளது. கம்பளி, பட்டு முதலியன அதிகமாக நெசவு செய்யப்படும் இடம். காடுபடு திரவியங்களும் மிகவுள. செம்பு முதலிய லோகங்கட்கும் குறைவில்லை. கைத்தொழில் வன்மையில் இச்சமஸ்தான் மக்களை இலகுவிற் றுண்டவியலாது.

## என்ன வேண்டும்?

அவ்வாறிருந்தும் இச்சமஸ்தானம் கீழ்நிலையில் இருப்பதே மிக்க பீதியை மக்கள் மனதில் உண்டாக்கியது. இப்போது இவர்கள் வேண்டுவது யாது? அரசியற் திருத்தம் வேண்டாது நாட்டினை முன்னணிக்குக் கொண்டுவருவதெப்படி? ஏழைகட்கு நிலம் வேண்டாமா? தனவந்தர் கையில் முழு நிலமுமிருக்கும் வரையும் ஏழைகட்கு மீட்சியில்லையே. [illegible] இறந்து ஏழைகள் [illegible]துப்போயினர். கைக்கூலியும் அதர்மமும் மிகப் பொலிந்துள்ள அரசியலில் ஏழைகள் என்ன துயரையடையார். கல்வி கிடையாது. வாக்குரிமைகிடையாது. வேறு எந்தநம்பக்கூடிய ஆதாரமும் இவர்க்குஇல்லையே. கிராமத்தில் எக்குழந்தையாதது வித்தியாசாலைக்குப் போவதில்லையாம். பிள்ளைகளைப் பார்த்தால் எலும்புக்கோர்வை தான் தெரியும். பெண்கள் நிலையைப்பற்றிப்பேசவேண்டியதில்லை. வைத்திய வசதிகள் நாட்டில் இல்லையென்றாலும் பொருந்தும். எனவே சேக் அப்துல்லா அவர்கள் தலைமையில் புரட்சி இச்சமஸ்தானத்தில் கிளம்பினால் அதையிட்டு ஏன் ஆச்சரியப்படவேண்டுமோ? ஆனால் 1931-ம் வருஷம் மேமாதம் ஏற்பட்ட கலகம் வகுப்புத் துவேஷத்தை மேற்கொண்டதாயது. இப்போது ஏற்பட்ட கலகமோ தேசியக் கொள்கையுடன் தோன்றியது. இதில் இந்துக்களும் சீக்கியரும் மூஸ்லீம்களுடன் சேர்ந்து கலகத்தை நடத்தினர்.

## பண்டிதர் நேரு

இச்சமஸ்தானத்தில் நிகழ்ந்துள்ள அரசியற் கிளர்ச்சிக்கு இந்திய காங்கிரஸ் மகாசபையும் வேண்டியளவு ஆதரித்[illegible] [illegible] வேண்டியது அவசியமாய்விட்டது. இந்திய சுயராஜ்யத் திட்டத்தை வகுக்கும் சமஷ்டியில் சமஸ்தானப் பிரதிநிதிகள் இடம்பெறவேண்டியதாகின்றது. அவ்வச்சமஸ்தானப் பிரஜைகளின் பிரதிநிதிகளே அதில் இடம்பெற வேண்டுமாம். மன்னர்கள் நியமிப்போர்க்கு இடம் ஏற்படாது. பண்டிதர் நேரு அவர்கள் காஷ்மீர் சமஸ்தானம் விஷயமாக மிக்க அக்கறை காட்டி வருகின்றனர். இவர் குடும்பம் காஷ்மீரைச் சேர்ந்தது. அச் சமஸ்தான விஷயத்தில் தமக்கு உரிமையுளதென்கிறார். மேலும் பண்டிதர் நேரு இச் சமஸ்தானத்துள் சென்றபோது அச்சமஸ்தான அரசினர் அவரைத்தடை செய்தனர். நேரு என்ன கூறினர்: "நான் ஓர் இந்தியன். இந்தியா எனது சொந்த நாடு. என்னை எவரும் தடைபண்ண முடியாது. இதுவுமன்றி நான் காங்கிரஸ் மகாசபையின் தலைவரென்பதும் அறியீரா"? என்றார். இப்போது காஷ்மீர் விஷயம் இந்தியாவில் மாத்திரமன்று இங்கிலாந்திலும் அடிபட்டுவிட்டது. இனிப் பழைய முறையில் வைத்திருக்கலாமென்பது அசம்பாவிதம்.

## வேறுவழியில்லை

அரசியற் சுதந்திரத்தைச் சமஸ்தான மக்கட்கு அளிக்க வேண்டியதுதான். சர்வாதிகார ஆட்சி போகவேண்டிய காலம் வந்துவிட்டது. இதனை சமஸ்தான அரசினர் உணர்ந்துவிட்டனரென்றே கூற வேண்டும். பண்டிதர் நேரு அவர்களுடன் கலந்து சமரசத்தை நாட்ட எண்ணாது அடக்குமுறையால் தமது எண்ணம் சலிக்குமென்றது எல்லாம் வீணாயின. காஷ்மீரில் மாத்திரமல்ல எல்லாச் சமஸ்தானங்களும் இனிச் சனநாயக ஆட்சியை மேற்கொண்டு பொதுமக்கள் நன்மையைநாடியே அரசுபுரியவேண்டிய காலம் உண்மையாய் வந்துவிட்டது. தலைவர்களை எல்லாம் சிறையில் அடைத்ததும் பண்டிதர் நேரு அவர்களைத் தடைசெய்து கைதியாக்கியதும் பிழையென்பதைக் காஷ்மீர் அரசினர் உணர்ந்துவிட்டனர். இப்போது காஷ்மீர் சமஸ்தானப் பிரதம மந்திரியாகும் ராவ் பகதூர் இராமச்சந்திர காக் என்பவர் பம்பாய் வந்து மகாத்மா காந்தியவர்களுடன் நீண்ட ஆலோசனை செய்தனர். சர்தார் படேலுடனும் கலந்து யோசித்தனர். இவர்கள் எவ்வித புத்தி கூறியிருப்பாரென நாம் சந்தேகப்பட வேண்டியதில்லை. சிறையிலிருக்குந் தலைவர்களை விடுதலை செய்து உண்மையான அரசியற் சுதந்தரத்தை வழங்கின் எல்லாம் நன்மையாக முடியும். அன்றேல் பண்டிதர் நேரு அவர்கள் தான் சென்ற வழியினின்றுய் பின்வாங்கப் போவதில்லை. சமஸ்தானத்தில் ஏற்பட்ட புரட்சியும் அடங்கப்போவதில்லை. காலத்தையும் நிலைமையையும் நோக்கிக் காஷ்மீர் மன்னர் அவர்கள் தமது நாட்டின் நிலையை ஒழுங்கு செய்யவேண்டியதுதான். அன்றேல் எல்லாவற்றையும் ஒருங்கே இழக்க வேண்டியதாய் முடியினும் முடியும்.

—கு. அ.

## சபை முதல்வர்



இலங்கைச் சரித்திரம் இதுவரையறியாத பாரிய வரவுசெலவுத் திட்டத்தை வியாழக்கிழமை ஸ்ரீ சேனநாயகா அரசாங்கசபையிற் சமர்ப்பிப்பார்.

## யாழ்ப்பாண நகரசங்கப் பகுதி

### சுகாதாரவாரக்கொண்டாட்டம்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி காணிவல் மைதானத்தில் சுகாதார, கிருஷிக, கைத்தொழிற் பொருட் காட்சிகள் 16-7-46 தொடக்கம் 20-7-46 வரை நடைபெறும். பிரவேசப்பணமில்லை.

## சித்திர - ஆசியர்களும் சம்பளத் திட்டமும்

இம்மாதம் 6-ந் திகதி வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாசாலை மண்டபத்தில் நிகழ்ந்த வடமாகாண சித்திர - ஆசிரியர்களின் கூட்டத்தில் சம்பளத் திட்டசபையினர் சித்திர - ஆசிரியர்களின் சம்பள விஷயமாகச் சிபார்சு செய்யப்பட்டவை அநீதியானவையென்றும், இது சம்பந்தமாக அறிக்கையொன்றைத் தயாரித்துக் குறித்தஅதிகாரிகளுக்குச் சமாப்பிக்கவேண்டுமென்றும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

—கடிதம்


## இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல்

வலிகாமம் - கிழக்குப்பகுதி

சைவ வித்தியா விருத்திச் சங்கக் [இந்துபோட்]

காரியதரிசியும், அப்புக்காத்துமாகிய

கோப்பாய்

திரு. சுப்பிரமணியம் இராசரத்தினம்

அவர்கள்

புது அரசியல் திருத்தப்படி நிறுவப்படும்

இலங்கைப் பாராளுமன்ற அங்கத்தவர் பதவிக்கு

ஓர் அபேட்சகராக முன்வந்திருக்கிறார்கள்.

பிரிவு: கீழ்க்காட்டப்படும் கிராமசங்கப் பகுதிகள்

(1) அச்சுவேலி, (2) புத்தூர், (3) உரும்பராய், ஊரெழு, நீர்வேலி, (4) கோப்பாய் (5) நல்லூர் (6) கொக்குவில், கோண்டாவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலாயாப் புதினம்

N. T. துரை, சிறம்பான்

ஊர் திரும்பவேண்டும் தாய் பிள்ளைகளின் கண்களில் முழிக்க வேண்டும் என்று ஒற்றைக்காலிலே நின்ற சிலருக்கு யுத்தம் முடிந்த எட்டாம் மாசம் தான், அவர்களைப் பிடித்த அட்டமத்தான் நீங்கிறன் போலும். அடடா? இலங்கைக் கப்பல்போகிறது என்ற செய்தி கிடைத்ததும் இவர்களடைந்த சந்தோஷமென்ன! ஓடாத ஓட்டமெல்லாம் ஓடி, ஏறுதப்படிகள் எல்லாம் வரிசையாக ஏறி இறங்கியும், ஈற்றில் 1500 மக்களுக்குத்தான் அனுமதிப்பத்திரம் கிடைத்தது. இந்த நாட்டில் உள்ள எங்கள் மக்களின் தொகை ஏறக்குறைய 25,000. அதில் 1500 பேர் மட்டுமே பிரயாணமானுர்கள் என்றல், மற்றவர்களின் ஏமாற்றத்தைச் சொல்லவும் வேண்டுமா. ஏமாற்றமடைந்ததற்குப் பல காரணங்களுண்டு. யுத்தக்கைதிகளாக இருந்த துரைமார்களைப் பலவந்தப்படுத்திச் சொந்த நாடுகளுக்கு அனுப்பிவிட்டார்கள். ஆகவே இராசாங்கவேலைகள் பார்ப்பதற்கு அவசியமாக, யுத்த வீரர்களுடன் எங்கள் தாய் பிள்ளைகளின் சேவையும் தேவை. ஆனதுபற்றி இன்னும் சிறிது காலத்திற்கு இவர்களுக்கு லீவு கிடையாது. அத்துடன் யுத்த காலத்தில் நகை நட்டையும் மற்றும் விலையுள்ள தட்டுமுட்டுச் சாமான்களையும் விற்று ஜீவனம் நடத்திவிட்டார்கள். அணிந்துகொண்டு வருவதற்கு நகைகள் இல்லாமையால் இவ்விடம் சிறகவில்லை. தங்கள் பிரதிநிதி இங்கு நடந்த ஓர் உபசாரக் கூட்டத்தில் நகைநட்டு அணிவது நாகரீகமன்று. அவை அவசியம் இல்லை என்று உரக்கக் கூவிவிட்டார். ஆகையால் அந்த வகையில் நகை கட்டுவிற்றதைப்பற்றிக் கவலையில்லை. இப்போது இருக்குமானல் விற்றுக் கப்பற்கூலி கொடுக்க உதவுமல்லவா? கவலை. நல்லகாலத்தில் வெள்ளி 21 கொடுத்து "O. S. K. மாறு"வில் செல்வதற்கே முடியாது இருந்த எம்மவர்க்கு இப்போது வெள்ளி 175 கொடுத்து எப்படி வாமுடியும். முன் வந்தவர்கள் அனைவரும் நோயால் பீடிக்கப்பெற்றவர்களும், கைம்பெண்களும் தான். ஏதோ தட்டித்தவறி வந்த மற்றவர்கள் அதிக சாமர்த்தியசாலிகள் என்றே சொல்லவேண்டும்.

சிங்கப்பூரில் கப்பல் வந்துவிட்டால் அறைமுகத்தில் எங்களைப் பார்க்கவரும் ஏசண்டுமாரும் ஹோட்டல் முதலாளிமாரும் இம்முறை ஏமாற்றமடைந்திருப்பார்கள். அத்துடன் பந்துக்கள் வந்துவிட்டால் அவர்கள் கொண்டுவரும் விஸ்கோத்துக் மிட்டாய் என்பவற்றை ருசிபார்ப்பதற்கு ஓடி வரும் சிறுவர்களும் இம்முறை ஏமாற்றமடைந்திருப்பார்கள். பாவம்! என்ன செய்வது. நாலுபணம், எட்டுப் பணம் வாங்கி ஒரு "கிறும்" போடுவதற்காக நயநட்டம் விசாரிக்க வரும் நண்பர்களுக்கும் இம்முறை ஏமாற்றம்தான். நன்றுகச் சொன்னீர்கள், இவ்விடமுள்ளவர்களைக் கைவிடப் பட்டவர்கள் என்று. அது உண்மைதான். முன்தேடிய தேட்டம் தான் போகட்டும். மலாயா வீழ்வதற்குச் சில நாட்களுக்கு முன் ஒருமிக்க மூன்று மாச சம்பளத்தை அரசாங்கம் எங்களுக்கு உதவியது. எங்களுடைய ஆபத்துக் காலத்திற்கு இது உதவுமென்று வைக்காது மூலைமுடுக்கில் போட்டிருந்த பணத்தையும் சேர்த்து கடைசி நேரத்தில் உங்களை நம்பி அனுப்பினேமே. அப்போது பணம் அனுப்பச் சிலர் பட்ட கஷ்டம் உங்களுக்குத் தெரியுமா? எதிரி பினங்குப்பக்கமிருந்து தெற்கு நோக்கிச் சிங்கப்பூரை நாடிவருகிறன். வரிசையாக 'வங்கி'களும் மூடப்படுகின்றன. அப்படியிருந்தும் எதிரியை விட வேகமாகத் தென்நோக்கி ஓடி வங்கிகள் மூலம் பணம் அனுப்பினுர்கள். பின்பு தங்கள் இருப்பிடம் வர முன் எதிரி இவர்கள் இருந்த பட்டணத்தைக் கைப்பற்றியபடியால் பெண்டுபிள்ளைகளையும் பார்க்கமுடியாது முழித்த முழிப்பை என்னென்று சொல்வது. ஐயையோ! இவ்வளவு கஷ்டத்துடன் அனுப்பிய பணம் போய்ச் சேர்ந்ததோ? சேர்ந்தாலும் வயசு சென்றவர்கள் அதை என்ன செய்தனரோ? உயிருடன் இருக்கின்றனரோ? இப்படியாக வருந்திக்கொண்டிருக்கையில் முதம் கடிதம் கிடைத்தது. பணவிஷயமாக ஒன்றும் எழுதவில்லை. ஏதோ முதற் கடிதத்தில் க்ஷேமத்தை மட்டும் விசாரித்திருக்கிருர்கள். மற்றக் கடிதத்தை எதிர்பார்ப்போம் என்று இருந்தவர்கள் இன்னும் தான் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிருர்கள். வேறு சிலருக்குக் 'காணி' ஒன்று 'அரு' விலை கொடுத்து என்பெயருக்கு வாக்கியிருக்கிறேன். ஊர் வரும்போது பெயர் மாற்றலாம் என்று வருகிறது. அடடா, போதுமப்பாபோதும், உங்குள் எங்கள் வீடுவாசல்களுக்கும் கள்ள உறுதி முடித்து வைத்திருக்கிறீர்களோ என்னமோ?

உங்கள் சின்னமேளம், பெரியமேளத்தில் எங்களுக்கு அக்கறையில்லை. யப்பான்துரையின் வாழ்வு உண்மையென நம்பி அரசனை நம்பி, புருஷனைக் கைவிட்ட பெண்டிர்கள் கதைதான் தெரியுமே. இளம் பெண்கள் தந்தை தாயரை வெறுத்துத் துரைமாருடன் 'டாக்கு-டிக்கென' நடந்து இப்போது ஒன்று இரண்டு பெற்றுத் தெருத்தெருவாய் அலைகிருர்கள். இவர்கள் பெற்ற பிள்ளைகள் யப்பானியரா? அப்படியாயின் எங்கள் புதிய அரசியல் திட்டத்தில் இவர்களுக்கு பிரஜா உரிமையுண்டா என்று ஒரு பத்திரிகையிற் கூட எழுதிவிட்டார்கள். இதுவென்ன புதுமைப் பித்துக் கோளாறு? இன்னும் ஒரு விஷயம். எங்களுக்கு நிறைய டின் சரக்குகள் அவுஸ்திரேலியாவிலிருந்து வருகின்றன. நாலு வருஷமாகக் கண்ணுற் காணுத வகையருக்கள் வாங்கி ருசிபார்ப்பதற்குச் 'சேப்புச்' சட்டையிற் சில்லறை குறைவு, ஒரு சமயம் சதாவாங்கிச் சாப்பிட்டால் எங்கள் ஊர் சரக்குகள் மேல் வெறுப்புத் தட்டுமோ என்றதில். ஏன்! தயவுசெய்து நீங்கள் ஒரு 'சிப்மென்' ஓடியல் அனுப்புகிறது தானே? பின் கவலை வேண்டாம்! தெரியுதா?

ஆசிரியருக்குக் கடிதம்:

# நமக்கு ஒருவருமில்லை

தாய்க்கும் சேய்க்கும் இடையிலே இயைந்த இன்பமும் அன்பும் உலகத்திலே தலையாயது. கண்காணுத கடவுளையும் "அம்மையே அப்பா" என்று தன்னையே மறந்து துதிக்கும் போதும் தாயே முன்வந்து தனியழகு செய்கின்ருள். அடித்த தாயை அழைத்து அகம் உருகி அழும் குழந்தையின் கருத்துமென்ன? இதனுல் அன்றே அமரகவி பாரதியாரும் "பெற்ற தாயும் பிறந்த பொன்னுடும்" என்று தாய்க்கே முதல் இடம் கொடுத்தார். பெற்ற தாய்க்கு எவ்வளவு அன்பும் பணிவும் இன்பமும் காட்டுகின்ருேமோ அவ்வளவு தன் தாய்நாட்டிற்கும் அன்பும் பணிவும் காட்டவேண்டும் என்பது உட்பொருளாகும்.

இலங்கை என் தாய்நாடு. இந்நாடு பிறருக்கு அடிமைப்பட்டு இருப்பது மிகக் கேவலமானது. ஆங்கிலமொழி மூலம் கல்வி கற்பிக்க எத்தனையோ தமிழர்கள் தவஞ் செய்வதை எண்ணினுல் உயிரையே விடுவது மேல் எனத் தோன்றுகின்றது. ஆங்கிலம் ஆங்கில நாட்டுக்கே உபயோகமாகுமொழியத் தமிழ் நாடாகிய ஈழநாட்டிற்கு உபயோகப்படாது. தமிழ்ப்பண்டிதர், தமிழ்ப் புலவர்கள் என்ருல் யமதூதுவர்கள் என்று வெறுக்கின்ருர்கள். வருங்கால இலங்கை இலங்கையருக்காக மிளிரவேண்டுமானுல் வருங்காலத் தமிழர்-சிங்களசமுதாயம் சுகம்பெற்றுத் தன்மானம் மிக்கவராய்த் தலைநிமிர்ந்து நிற்கவேண்டுமானுல் சென்ற காலத்தைப் பற்றி சிறப்புற ஆழமாக அறியவேண்டும். பழமை வேண்டாம். 'பழமையில் ஒன்றுமில்லை என்று தட்டிக் கழிக்கின்ருர்கள் நம்மில் அநேகர். தன் தாயும் தந்தையும் எப்படி வாழ்ந்தார்கள் என்பதை அறியாத மகன்; தன்னை எவ்விதம் ஒழுங்குபடுத்தி வாழ முடியும். சிறப்பாக நமது தாய்நாட்டின் பழமையில் அநேக நல்ல பாடங்கள் உண்டு. அவற்றை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். பழமையிலிருந்துதான் புதுமை தோன்றுகின்றது. 'பழமையைக் கண்டு பூத்த புதுமைச் சமுதாயத்திற்குத்தான் வாழ்வுண்டு-வளமுண்டு; பெருமையுண்டு-அருமையுண்டு: ஆகவே எந்த அளவுக்கு நாம் நமது பழமையை மறந்து-நிந்தித்து நிகழ்காலத்தில் மனம் வைக்கின்ருேமோ அந்த அளவுக்கு நமது எதிர்கால வாழ்க்கையைத் தாழ்த்திவிட்டவர்களாவோம்.

பழமையைப் போற்ருத புதுமைத் தமிழா! ஆங்கிலத்தில் S. S. C. ஒருவன் படித்தவுடன் அவன் எல்லாம் அறியக் கூடியவன்: அவனே நிகழ்கால உலகில் முன்னேற முடியும் என்று நம்புகின்ருய்! நான் கூறுகின்றேன் கேள்! எதிர்காலம் நம்முடையதாக இருக்கவேண்டுமே தவிர பிறனுடைய இரவலாக இருக்கக்கூடாது. ஏனென்ருல் நம் நாட்டுப் பாரம்பரைக்கும் பண்பாட்டுக்கும் எவ்வளவோ வித்தியாசமுண்டு. அவ்வித்தியாசத்திற்கு ஏற்பவே குறிக்கோளும் அமைந்திருக்கும். அந்தக் குறிக்கோளை அடைவதற்கு ஏற்படும் எழுச்சியும உணர்ச்சியும் அந்த நாட்டின் பாரம்பரைக்கும் பண்பாட்டிற்கும் ஒத்ததாக இருக்க வேண்டும். அந்தக் குறிக்கோளும் மேற்படி பண்பாட்டையும் பாரம்பரையையும் பாதுகாப்பதாயிருத்தல் வேண்டும். அப்படியின்றி அந்நியர் மண்ணில் அரும்பி முளைத்த குறிக்கோள்களை நம் நாட்டில் நடமாடச் செய்துவிட்டால் நம் விதி எங்கே! நம் வாழ்வு எங்கே!

இலங்கைப்பல்கலைக் கழகத்தில் தமிழ் வித்துவான் வகுப்பிற் படிப்பதானுலும் தமிழ் ஆசிரிய பயிற்சி கலாசாலையிற் பயிற்சி பெறுவதானுலும் ஆங்கில S. S. C. அறிவு வேண்டுமாம். பண்டிதர்கள்—புலவர்கள் என்ருல் என்ன? ஆங்கிலம் இல்லாவிட்டால் எடுக்கக் கூடாதாம். ஒரு ஆசிரிய கலாசாலை அதிபர் எனக்குக் கூறினுர்: 'தமிழ் வித்துவான்களுக்கு என்ன தெரியும். அவர்கள் 3 வருஷம் அல்லது 4 வருஷம் படிக்கவேண்டும்' [illegible] என்னே! தமிழ்த்தாயே! நீ பெற்ற பிள்ளைகள் உன்னையறியாது உன்னை உதறித் தள்ளும் போது உனக்குப் புகலிடமுண்டா? ஆங்கிலமே அளவு கருவியாகக் கொண்டு எல்லாவற்றையும் அளக்கும் இச்சமுதாயம் இருந்துமென்ன! ஒழிந்துமென்ன?

மேல்நாட்டார் லௌகிகத்தையும் பாரமார்த்திகத்தையும் பிரித்துப் பார்த்தார்கள். தமிழர்சமுதாயம்—இந்திய சமுதாயம் அவற்றைச்சேர்த்தேபார்த்தார்கள். இதற்குக் காரணம் இயற்கை. இதையறியாத நவீனத் தமிழர், விஞ்ஞானம் பொருளாதாரம் என்று ஏதோ என்னவோ பேசுகின்ருர்கள். ஓ! நவீனத் தமிழா! லௌகிக வாழ்க்கைக்கு சுவசம்போல பாரமார்த்திகத்தைக் கையாண்டுள்ளார்கள். நாம் உயிரோடிருக்க நமது சுதந்தர மொழி வேண்டும். அயலாந்தை இங்கிலாந்தின் பிடியிலிருந்து விடுவிக்க 72 நாள் உண்ணுவிரதம் இருந்து உயிரை விட்ட மாக்ஸ்வினி முதல்செய்த தொண்டு தேசிக மொழியாகிய கெயிலிக் மொழியைப் பரப்பினதே. "கெயிலிக் இலக்கிய சங்கம்" என்ற சங்கத்தை தேசமொழிக்கும் தேசீயக் கல்விக்குமாகக் கண்டவர் மாக்ஸ்வினி. அதற்கென அச் சங்கத்தார் ஒவ்வொருவரும் ஒரு மோதிரம் அணியவும் அம்மோதிரம் அணிந்தோர் எல்லாரும் கெயிலிக் மொழியிலேயெ பேசவும் ஆங்கிலத்தை மறக்கவும் செய்தவர் மாக்ஸ்வினி. தனது மணச் சடங்கையும் ஐரிஷ் மொழியிலேயே நிறைவேற்றிய நிறைமொழியாளன் மாக்ஸ்வினி. ஏன்! நம் மகாத்மா காந்தியடிகள் என்ன கூறுகிருர். "தாய்மொழியின் இடத்தில் ஆங்கிலத்தைப் புகுத்தியது நமக்கும் ஆங்கிலேயருக்கும் உள்ள தொடர்பில் நிகழ்ந்த மிகப் பெரிய வருந்தத்தக்க அத்தியாயமாகும். ஆங்கிலேயரின் கல்விமுறை நம்மாணவரின் நரம்பு, பண்பு, என் உயிரையே அழித்துவிட்டது எனலாம்" என்று எழுதியுள்ளார். இத்தகைய தியாக எண்ணத்தை எண்ணுகின்ற ஒரு தியாகி நம் இலங்கையில் உண்டா? உண்டாயின் இன்று தமிழ்ப் புலவர்களும் தமிழாசிரியர்களும்தாழ்த்தப்பட்டவர்களாய் — தீண்டாதவர்களாய் கருதப்படுவார்களா! தமிழ்மொழி இலக்கியங்களின் பெருமையை—மேனுட்டுப் பேரறிஞர்களாகிய போப், வீரமாமுனிவர், கால்வெல்ட் முதலியோர்களால் வியந்து பாராட்டிய தனிச் சிறப்பு வாய்ந்த எம் தமிழ்மொழி—எம் தாய்மொழி வளப்பத்தை ஒரு சிறிதும் அறியாதவர்கள்—நாட்டிலுள்ள தமிழ் உணர்ச்சியை மதித்து நடக்க அறியாதவர்கள்—ஆட்சிப் பீடத்தில் தமிழர் என்று சொல்லிக்கொண்டு அமர்ந்திருப்பது வெட்கம்!

ஒரு நிகழ்ச்சியைக் கேளுங்கள்! சென்னைப் பல்கலைக் கழகத்தில் "ஓரளவு வடமொழியையும் சேர்த்துக் கட்டாய முறையில் படித்தவர்கள்தாம் தமிழிலே பல்கலைக் கழக வித்துவான் பட்டம் பெறமுடியும்" (இலங்கைப் பல்கலைக் கழகத்தில் ஆங்கில S. S. C. அறிவுடையவர்கள்தான் வித்துவான் படிக்கச் சேரமுடியும் என்பதுபோல்) என்றிருந்த சட்டதிட்டங்களை அடியோடுமாற்றித் தனியாகத் தமிழ்மட்டுமே படித்தவர்களும் 'வித்துவான்' பட்டம் பெற்றுச் சிறப்படையுமாறு விதியேற்பாடுகளைத் திருத்தி-யமைத்து இன்று தமிழ்நாட்டில் தனித்தமிழ் வித்துவான்கள் தலை சிறந்து விளங்கும்படி திரு கா. நமசிவாய முதலியார் செய்தார்கள். இவ்விதம் அத்தமிழ்ப் பெருமகனுர் செய்துவைத்த சீர்திருத்தத்தால்தான் "பிறிதொரு மொழியின் துணையினைக் கட்டாய முறையிலே வேண்டா" தமிழின் தனிப் பண்பு விளங்கி நின்றதுடன் தமிழ்நாட்டிலே தாய்மொழி படித்தவருக்கும் ஒரு தகுதியுண்டு என்று நிலைநாட்டப்பட்டது. அயலார் எள்ளிச் சிரித்துவந்த நீண்டநாட் பழியையும் அது நீக்கிவிட்டது.

இலங்கையில் தமிழ் மாணவர்களுக்குத் தமிழிலே தமிழ்ப் பாடல்களைப் போதிப்பதற்கும் தமிழாசிரியர்களுக்கு ஆங்கிலக் கல்வி கட்டாயம் இருந்தாக வேண்டும் என்று கல்வி அதிகாரிகள் வற்புறுத்துவதற்கும் என்ன அவசியம் என்று நமக்குப் புரியவில்லை. சமஸ்கிருதம் தெலுங்கு கன்னடம் மலையாளம் ஆகிய மொழிகளைப் போதிப்பதற்கும் இவ்வித நிர்ப்பந்தம் உண்டா என்று நாம் அறிய விரும்புகின்ருேம். தாய்மொழியைப் படித்துப் புலமை பெற்ற குற்றத்திற்காக அவமதிப்பே கிடைக்கின்றது. தமிழ் மட்டும் படித்துப் பட்டம்பெற்ற குற்றத்திற்குத் தண்டனையளிப்பது போல் குறைந்த தகுதி ஊதியம், உரிமை முதலியவைகளை விதிக்கின்ருர்கள். தமிழன்னையைத் தெருவில் விட்ட தமிழர்களே! இந்தச் சாபமும் பழியும் உங்கள் சந்ததியைச் சூழாதுவிடாது. "கண்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம்மாறும்" என்று நாம் நம் காலத்தை நோக்கி விழித்துக்கொண்டுதான் இருக்கின்ருேம்.

நா. சிவபாதசுந்தரன்.

## 260-ம் இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

### வலைத்துப்பட்டிகள் (நெற்றிங்)

இந்தியா தவிர்ந்த ஏனைய நாடுகளிலிருந்து இறக்குமதியாக்கப்படும் 'நெற்றிங்' வகையருக்கள் யாவும் புடவைக் கட்டுப்பாட்டுத் திட்டத்திலிருந்து இத்தேதி துவக்கம் நீக்கஞ் செய்யப்பட்டுள்ளன.

ஈ. றெட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி

கொழும்பு
5-7-1946.

## மன்னூர்ப்பகுதி ஆசிரியசங்கம்

ஆசிரியர் தினம் மேற்படி சங்கத்தாரால் 10-7-46-ல் கொண்டாடப்பட்டது. காலை 10 மணியளவில் ஆசிரியர் எல்லோரும் மன்னுர் நல்லாயன் ஆண்பாடசாலையிற் குழுமித் தாம் செய்ய வேண்டிய பல விஷயங்களை ஒட்டிக் கலந்துரையாடினர்.

பிற்பகல் 4-30 மணியளவில் சங்கத்தின் ஆதரவில் பகிரங்கக் கூட்டமொன்று திரு. A. அழகக்கோன் J. P. அவர்கள் தலைமையிற் கூடியது. பல பெரியார் சொற்பொழிவுகள் ஆற்றியபின்னர் மேல்வரும் பிரேரணை சர்வ அங்கீகாரம் பெற்றது.

"புதிய சம்பளத் திட்டத்தில் ஆசிரியர்களுக்கு வழங்கப்பெறும் சம்பளம் அநீதியானதும் மிகக் குறைவானதுமாகையால் அது கல்வியின் நலத்திற்குப் பாதகமானதாயிருக்குமென இச்சபை தீர்மானிக்கின்றது.


# காங்கேசன்துறையில்

திறமான இங்கிலீஸ் சீமேந்து, மலையாளம் கொழுக்கி ஓடுகள், செங்கல் மற்றும் பல சாய்ப்புச் சாமான்களும் விலை சகாயமாய்க் கிடைக்குமிடம்:—

கார்க்கோ ட்ரான்ஸ்போட் கம்பெனி
(CARGO TRANSPORT Co.)
காங்கேசன்துறை

தந்தி விலாசம்: "நியூகோ"; டெலிபோன் நம்பர் 5

[2821]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# பாசம்

S. N. சொக்கநாதபிள்ளை

(சென்றவாரத் தொடர்ச்சி)

"காதல! உம்மைப் பிரிந்து எவ்வாறிருப்பேன். எனக்கு மணமுடிக்க என் பெற்றோர் தீர்மானித்துவிட்டனர். இற்றைக்கு நாலாம் நாள் கல்யாணம். அதற்குமுன் வந்து அடியாளைக் காக்காவிடின் என் உடலைக் காணும் பாக்கியம் கூடத் தங்களுக்குக் கிடையாது. எந்நேரமும் தங்களை நினைந்துருகும்...........'' என்றெல்லாம் நாவல்களில் வருவதுபோன்று அதிலெழுதியிருக்காதா? நான் தீரத்துடன் நடந்து அவள் கையைப் பற்றமாட்டேனே என்றெல்லாம் சில நிமிஷங்களுக்கிடையில் என்மனம் கற்பனை செய்ய ஆரம்பித்துவிட்டது.

அழகிய பொருளோ, அருமையானதாகவோ ஒன்றிருந்துவிட்டால் அது தனக்குத்தான் சொந்தமென்று உள்ளம் விரும்புகிறது. அதுபோன்ற ஆசை மற்றவர்களுக்கும் இருக்கும், இருக்கிறது என்று மனம் ஒருபோதும் ஒப்புவதில்லை. அவ்விதம் மனம் ஒப்புமாயின் உலகில் சண்டை பூசல்கள் ஏன் உண்டாகப்போகிறது. பெண்கள் உள்ளம் எத்தகைய மேன்மையானது, அதில் உதிக்கும் அன்பு தாயன்பா, சகோதர அன்பா, காதலன்பா என்பதை உணர்வது கஷ்டம். அவிவேகியாகிய நான் அதுபோன்றுதான் ஈஸ்வரி என்னிடம் காட்டிய மாசு மறுவற்ற அன்பு சகோதர அன்பென்பதை உணரமாட்டாது அதைக் காதலென்று எண்ணி என்ன துரோகம் செய்ய நினைத்தேனென்று எண்ணி பச்சாத்தாபமுற்றேன். வெட்கமுற்றேன். கண்ணீர்கூட விட்டேன். ஈஸ்வரிக்கு விவாகமென்று அறிந்த உடன் என்னைத்தவிர வேறொருவரும் அவளிடம் உரிமை பாராட்டக்கூடாது என்று பொருமையால் ஆத்திரமுற்றமனம், அக்கடிதத்தை வாசித்ததும் தன்னிலைமாறிக் குதூகலமடைய ஆரம்பித்தது. [காதலன்பை எதிர்பார்த்த எனக்கு ஈஸ்வரியின் கடிதம் எவ்வாறு சகோதரன்பை ஊட்டியிருக்குமென்று வாசகர்கள் ஆச்சர்யமுறலாம். என்னளவில் காதலென்று கற்பனை செய்து இருந்ததன்றி அதை வெளியில் காட்டியிருக்கவில்லையல்லவா. மற்றொன்று என் மனம் இவ்வித கற்பனையைச் செய்யத் தொடங்கியபின் ஈஸ்வரியுடன் சேர்ந்து பழக சந்தர்ப்பம் கிடையாமையும் ஒன்று. ஆடவர்களைப்போல் பெண்கள் சபல உள்ளம் படைத்தவர்களுமல்ல. காதலன்பை விட சகோதர அன்பை உலகில் பெறுவது கஷ்டமானது என்பதை அநுபவத்தாலன்றி அறியமுடியாது: அவ்விதம் உணர்ந்தவனெவனும் சகோதர அன்புக்காகத்தான் வாடுவான்.] என்மனச் சஞ்சலத்தை மாற்றி அமைதியுறச் செய்த கடிதம் இதுதான்:

அன்பே உருவாய் எமதருமை அண்ணா!

பரம்பொருளருளால் நாமெல்லோரும் நற்க்ஷேமமே இருக்கிறோம். தங்கள் சுகமும் அறிய அவாவுறுகிறோம்.

எக்காரணம் கொண்டோ தங்கள் கடிதங்களை முன்போல் காணமுடியாதிருக்கின்றது எம் அறியாமையால் தங்களுக்கு ஏதாவது அபசாரம் செய்துவிட்டோமோ என்று வருந்துகிறோம். அல்லது என்னுடன் பிறவா அந்நியர்தானே என்று எம்மை உதாசீனம் செய்கிறீர்களோ? உலகத்தார் முன் தாங்கள் எம்முடன் பிறவாதிருக்கலாம். ஆயின் ஈஸ்வரன் கிருபை எம்மைப் பிணைத்திருக்கிறது அன்பெனும் பாசத்தால். என்னிடமிருந்த அந்நிய அநாகரீகமெல்லாம் நீங்கி நல்வாழ்வுக்கு வழிகாட்டிய சற்குரு தாங்கள். அல்லும்பகலும் தங்கள் நினைவு எம்மைவிட்டு நீங்குவதில்லை. உலகிற் கிடைத்தற்கரிய அன்பு தாயன்பும், சகோதர அன்பும் தான்.

"என் தாயில்லை யென்று சிலகாலம் வருந்திய குறையை தாங்கள் தங்கள் அன்பால் நீக்கித் தாய்மையின் இனிமையை எனக்குக் காட்டினீர்கள்" என்று அம்மாவுக்கு எழுதுவீர்கள். அதுபோன்றுதான் எமக்கு ஒரு அண்ணனில்லாக் குறையை நீக்கித் தங்கள் சகோதர அன்பால் எம் சுகம் கவர்ந்தீர்கள். வயதில் குறைந்த நான் தங்களை வாழ்த்தவில்லை. தாங்கள் எங்கிருப்பினும் பரம்பொருளருளால் என்றும் குறைவற்ற சுகத்துடனிருக்க வேண்டுமென்பதே பிரார்த்தனை. நிற்க,

அடுத்து வரும் தினங்களன்று எங்கள் வீட்டில் நடக்கவிருக்கும் விசேடத்தை இதுவரை அறிந்திருப்பீர்கள். இதற்கு முன்பும் எழுத விரும்பினேன். பெண்மைக் குணம் தடுத்துவிட்டது. அதற்குக் கோபிக்கமாட்டீர்களென்று எண்ணுகிறேன். உற்றார் உறவினரால் வீடு நிறைந்திருக்கிறது. இருப்பினும் தாங்களில்லாதது எமக்கெல்லாம் ஒரே சூன்யமாக இருக்கிறது. கல்யாண ஆயத்த தடபுடலில் எம் தாய் தந்தையர்க்குச் சகவாசமின்மையால் நானே எழுதுகிறேன். தங்களை நாமெல்லாம் பார்த்து எத்தனை நாட்கள் போய்விட்டன.

நாங்கள் தங்களிடம் செலுத்தும் அன்பு, சகோதர அன்பு உண்மையாயிருக்குமானால் தாங்கள் வந்திருந்து என்னை வாழ்த்தும் பாக்கியம் பெற்றவளாவேன். என் பிற்காலக் குடும்ப வாழ்க்கை இன்பமயமாக நிறைந்திருக்குமென்பதற்கு ஒரு சுபசகுனமாக இருக்கத் தங்கள் நல்வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறேன். அடியாள் ஆவலைப் பூர்த்தி செய்ய அருளுமாறு பரம்பொருளை வேண்டுகிறேன்.

தங்களன்பையே வேண்டும்
அன்பான தங்கை,
ஈஸ்வரி.

கடிதத்தைப் பன்முறை படித்தேன். சென்றுபோன காட்சிகளை நினைவுகூர்ந்தேன். எழுந்து நடமாட முடியாத நிலையில் அவர்கள், யான் ஒரு அந்நியனாக இருக்கவும் அவ்விதம் கருதாது என்னைப் பேணிக் காத்ததை நினைவு கூர்ந்தேன். அன்புடனணைத்த கைக்கு விலங்கிட நினைத்தேனே என்று எண்ண, என்மேலேயே ஆத்திரமுண்டாயிற்று. இரண்டுவார 'லீவு' வேண்டுமென்று கொழும்புக்கு மேலதிகாரிக்குத் தந்திமூலம் விண்ணப்பமனுப்பினேன். அதிஷ்டவசமாக 'லீவு'ம் கிடைத்தது. அன்று சாயந்தரமே புறப்பட்டு ரயிலில் ஒரு வழியாக இடம் பிடித்து யாழ்ப்பாண மடைந்தேன். கலியாணத்திற்கு இரு தினங்களிருந்தன. அத்தனை நாட்களாகக் காணாதிருந்த கடனெல்லாம் சேர்த்து பேச்சுப் பிரவாகமாக ஓடிற்று.

மாப்பிள்ளை நடராசன் என் நண்பன். கலியாணமும் வெகு சிறப்பாகவே நடைபெற்றது. மணக்கோலத்தில் புத்தழகு பொலிய ஈஸ்வரி என்னை வணங்கினாள். காமாந்திரனாக அவள் வாழ்வைக் கெடுக்க எண்ணினேனே என்று நினைவுண்டாக என்னையுமறியாது பெருகிய நீரையு மடக்கிக்கொண்டு 'பரிதியும்ஒளியும்போல் என்றும் குன்றா இன்பத்துடன் தீர்க்க சுமங்கலியாக வாழப் பரம்பொருள் அருள்வான்' என்று இருதயபூர்வமாக ஆசி கூறினேன். கண்களில் ஆனந்த பாஷ்பம் சொரிய மலர்ந்த முகத்துடன், கணவனுடன் கைகோத்துத் தன் இன்ப இல்வாழ்வை ஆரம்பித்தாள் ஈஸ்வரி.

## யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி

**1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.**

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 34,36700. 100ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணங் கட்டுமுறை:**
மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்று வரவு:**
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்:**
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்:**
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.
இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்:**
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்து கொள்ளலாம்.

S. கனகசபை
சிருப்பர்

(2812)

## 258-ம் இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

198-ம் இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல் சார்பாக அறிவிப்பது: இனிமேல் எட்டியாந்தோட்டையில் உள்ள மெஸர்ஸ். கே. சிவகுருநாதன் அன்ட் சன்ஸ் மொத்தப் பங்கீட்டு வியாபாரியின் வியாபாரநாள் வியாழக்கிழமை காலை 9 மணியாகும். முன் வெளிப்படுத்தியவாறு காலை 10 மணிக்கன்று.

ஈ. றெட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு
3-7-46 [2828]

## 262-ம் இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

1946-ம் ஆண்டு ஜூன் மாதம் 21-ந் திகதி வெளிவந்த 9570-ம் இலக்க இலங்கை அரசினர் கசெற் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள 38-ம் இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டுக் கட்டளையை அவதானிக்கும்படி கேட்கப்படுகின்றனர். அதில் கைத்தறிப் புடவைகளின் புதிதாக அமைக்கப்பட்ட விலைப்பட்டி காணப்படுகிறது. இவ்விலை 1946-ம் ஆண்டு மே மாதம் 20-ந் திகதிக்குப் பிறகு இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாக்கப்பட்ட கைத்தறிப்புடவைகளுக்குரியது. இவற்றில் சென்னைமாகாணப் புடவைக் கமிஷனர் முத்திரையிடவில்லை.

2. இக்கட்டளைப் பிரதிகள் எல்லா உதவிப் புடவைக் கட்டுப்பாட்டதிகாரிகளின் கந்தோரிலும் விலைக்குண்டு.

ஈ. றெட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு
8-7-46 [2831]

## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறையில் கூடப்படும் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு 2457/P இலக்கப்பிரிவிடல் வழக்கில் 1946-ம் ஆண்டு ஆடி மாதம் 1-ம் திகதியைக் கொண்ட கோட்டுக்கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனம் 1946-ம் ஆண்டு ஆவணி மாசம் 28-ம் திகதி புதன் கிழமை பிற்பகல் 4 மணி வரையில் அந்தக் காணிக்குள் நின்று முதலாவதாக மதிப்பின்படி காணிப்பங்காளருக்குள்ளும் பங்காளர் கேள்விக்காரராக இல்லாவிட்டால் மறு பேர்களுக்கிடையிலும் அதியுயர்ந்த கேள்விக்காறனுக்குப் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### விபரம்

பருத்தித்துறை வேலுப்பிள்ளை சோமசுந்தரம், வழக்காளி,
பருத்தித்துறை 1. நாகமுத்து மாணிக்கமும் 2. பெண் முத்தம்மாவும், எதிராளிகள்.

### ஆதனம்

பருத்தித்துறை வென்றிபாகு தேவன் குறிச்சியிறை பெரிய பரப்பு. இது உலாந்தா V. சிவரத்தினத்தால் 1945-ம் ஆண்டு புரட்டாதிமாதம் 15-ந் திகதி 181-ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தின்படி குளி $11\frac{20}{32}$. அதற்குச் சேர்ந்தவைகளும் சொல்லப்பட்ட படத்தில் × என்று அடையாளமிட்ட கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலுருத்தும் B. என்று அடையாளமிட்ட வீடும். எல்லை, கிழக்கு சிதம்பரப்பிள்ளை சந்திரசேகரத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். வடக்கும், மேற்கும், ஒழுங்கை. தெற்கு, சதாசிவம் தியாகராசாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இது முழுவதும். பெறுமதி ரூபா 1750/.

S. C. Kanagasabai
கொம்மிஷனர்

புலோ கிழக்கு
10-7-1946 [2830]

## புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

பொது சனங்களுக்கு

வழக்கமாகத் தங்கள் வருடாந்தத் தேவைக்குரிய புடவைகளைச் செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களில் பெற்றுக்கொள்பவர்கள், அடுத்த தவணைக் கூப்பன் நொவம்பர் மாதத்தில் பெரும்பாலும் டிசம்பர் மாதத்தில் உபயோகத்துக்கு விடப்படுமாதலால், எச்சரிக்கப்பட்டு, இதுவரை வலுவு பெற்றுள்ள ஆறு கூப்பன்களைத் தங்கள் தீபாவலிக் கொண்டாட்டத்தின் பொருட்டுக் காப்பாற்றும்படி புத்தியேவப்படுகிறார்கள்.

ஈ. றெட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு, 4-7-1946
(2827)

## நாவலப்பிட்டி இந்து வாலிபர் சங்கம்

மேற்படி சங்க வருடாந்தக் கூட்டம் 6-7-46 சனிக்கிழமை பிற்பகல் 6 மணியளவில் கதிரேசன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. அத்தருணம் திரு. க. சுப்பிரமணியம் அவர்கள் தற்காலீக தலைவராகத் தெரியப்பட்டுப் பின்னர் புதிய உத்தியோகத்தர்கள் நிரந்தரமா தெரிவு செய்யப்பட்டனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NATIONALIST TAMIL WEEKLY
# THE EELAKESARI
Largest Circulation in Ceylon, India & Malay States
Vol. 17 | Chunnakam, Sunday, July 14, 1946 | No. 2

# அணுக்குண்டும் அஹிம்சையும்

### மகாத்மா காந்தி

அணுக்குண்டைப் போல வேறு எதுவும் அஹிம்சையை ஸ்தாபனம் செய்ய முடியாது என்று அமெரிக்க நண்பர்கள் யோசனை கூறுகிறார்கள். அணுக்குண்டுவின் நாச சக்தியைக் கண்டு உலகம் அருவருக்குமானால் அப்போது அது தற்சமயமேனும் அஹிம்சையைத் துறக்கலாம். அந்த அர்த்தத்தில்தான் அணுக்குண்டு அஹிம்சையை ஸ்தாபனம் செய்யும் என்று கூற முடியும். இது எது போல் இருக்கிறது என்றால் மனத்தைக் குமட்டுமளவுக்குப் பலகாரங்களை உண்டவன் போதும் என்று நிறுத்திக் கொள்வதைப் போலவே இருக்கிறது. ஆனால் அவன் குமட்டல் நின்று போனதும் முன்னிலும் அதிக ஆவலுடன் பலகாரங்களைத் தேடுவான். அதுபோலவே உலகமும் அணுக்குண்டு செய்யும் அழிவைக் கண்டு வெறுத்துவிடலாமாயினும் அந்த வெறுப்புணர்ச்சி நாளடைவில் குறைந்து போனதும் முன்னிலும் அதிக ஆவலுடன் ஹிம்சையையே மேற்கொள்ளும். ஆயினும் அநேக சமயங்களில் தீமையினின்றே நன்மை உண்டாவதுண்டு. ஆனால் அது கடவுளுடைய திட்டமேயன்றி மனிதனுடைய திட்டமன்று. தீமையிலிருந்து தீமையும் நன்மையிலிருந்து நன்மையும் விளைவதுதான் மனிதனுக்குத் தெரியும்.

இப்பொழுது அமெரிக்க விஞ்ஞானிகளும் இராணுவ அதிகாரிகளும் அணுக்குண்டுச் சக்தியை, அழிக்கும் வேலைக்குப் பயன்படுத்திவந்த போதிலும் இதர விஞ்ஞானிகள் அதையே ஆக்க வேலைக்குப் பயன்படுத்த முடியும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதுவன்று அமெரிக்க நண்பர்கள் கூறிய யோசனையின் அர்த்தம். இவ்வளவு தெளிவான விஷயத்தை என்னிடம் கேட்கக்கூடிய அளவு முட்டாள்கள் அல்லர் அவர்கள். தீயை அழிப்பதற்காகவும் உபயோகிக்கலாம், ஆக்குவதற்காகவும் உபயோகிக்கலாம். அக்கிரமி வீட்டைக்கொளுத்துகிறார். ஆனால் வீட்டிலுள்ள பெண்ணோ போஷணை தரும் உணவை ஆக்குவதற்காக அந்தத் தீயைத் தினந்தோறும் உபயோகிக்கிறாள்.

நான் அறிந்த மட்டில் அணுக்குண்டானது ஊழூழிகாலமாக மனித ஜாதியை நிலைக்கும்படி செய்துவந்த உயர்ந்த உணர்ச்சிகளை உயிரற்றனவாகச் செய்துவருகிறது என்றே கூறுவேன். யுத்தம் வந்தாலும் பாதகமில்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு யுத்த தர்மம் என்று வழங்கும் ஒன்று இருந்து கொண்டிருந்தது. ஆனால் அது இப்பொழுது வெட்ட வெளிச்சமாகிவிட்டது. யுத்தமாவது, யுத்த தர்மமாவது, வெறும் ஆயுதபல உபயோகம் மட்டும்தான் என்று தெளிவாகிவிட்டது. அணுக்குண்டு நேசதேசத்தார்க்கு அளித்துவிட்டதாகக் கூறும் வெற்றி வெறும் வெற்றிதான். எவ்வித பசையுமில்லாததேயாகும். ஆயினும் அது ஜப்பான் தேசத்தாரின் ஆண்மையைத் தற்சமயமேனும் அழித்துவிட்டது என்பது உண்மை. ஆனால் அப்படி அழிந்துவரும் தேசத்தின் ஆன்மா அடைந்ததுயாது என்பதை அவ்வளவு சீக்கிரத்தில் சொல்லிவிடுவதற்கில்லை. இயற்கையின் சக்திகள் வேலை செய்யும் விதத்தை யாரும் அறிந்துகொள்ள முடியாது. ஒரே மாதிரியான சம்பவங்களின் பலன்களை அறிந்திருப்பதைக் கொண்டே அறியாத பலன்களை ஊகிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். ஒருவனை அடிமையாக வைத்திருக்க விரும்பினால் அடிமையைப் பூட்டி வைக்கும் கூண்டில் நாமும் அடைபட்டிருந்தால்தான் முடியும். ஜப்பான் அக்கிரமமான ஆசைகளை எண்ணிச் செய்த அக்கிரமங்களை நான் ஆதரிப்பதாக எண்ணவேண்டாம். நான் கூறுவதெல்லாம் தோற்ற ஜப்பானுடைய நோக்கத்துக்கும் ஜெயித்த நேச தேசத்தார் நோக்கத்துக்கும் அதிக வித்தியாசமில்லை என்பதேயாகும். ஜப்பானுடைய ஆசை நேச தேசத்தாருடைய ஆசையைவிடக் கேவலமானது என்றே வைத்துக்கொள்வோம். அப்படியானாலும், ஜப்பானுடைய ஆசை அதிகக் கேவலமானது என்ற காரணத்தைக்கொண்டு கொஞ்சக் கேவலமான ஆசையுடைய நேச தேசத்தார் ஜப்பானில் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்த ஆண் பெண் குழந்தைகள் அனைவரையும் அழித்துவிடக் கூடிய உரிமையை அடைந்துவிடமுடியாது.

அணுக்குண்டு செய்துள்ள அற்புதமான நாசவேலையிலிருந்து நாம் நியாயமாக அறிந்துகொள்ளக்கூடிய படிப்பினையாதெனில் எப்படி ஹிம்சையை ஹிம்சையால் அழிக்க முடியாதோ அதுபோலவே அணுக்குண்டை அணுக்குண்டைக் கொண்டு அழிக்க முடியாது என்பதேயாகும். ஹிம்சையை அஹிம்சையைக் கொண்டே மாற்றமுடியும். துவேஷத்தைத் துவேஷத்தைக் கொண்டு வெல்ல முயன்றால் துவேஷம் அதிகமாகப் பரவவும் ஆழமாக வேரூன்றவுமே செய்யும். நான் பல தடவை கூறியதையும் என்னாலியன்றவளவு அனுஷ்டித்ததையுமே இப்பொழுது திரும்பவும் கூறுகின்றேன் என்பதை அறிவேன். நான் முதற் தடவையாகக் கூறியது கூட நானாகப் புதிதாகக் கூறியதன்று. மலை தோன்றிய காலம் முதல் இருந்துவரும் உண்மையேயாகும். ஆனாலும் நான் குழந்தைகள் எழுதும் "கொப்பி"ப் புஸ்தகங்களில் காணப்படும் வாக்கியங்களை வாயால் ஒப்பித்துவிடவில்லை. என்னுடைய ஒவ்வொரு நரம்பிலும் நின்று நாதம் எழுப்பிக் கொண்டிருக்கும் உண்மையையே கூறினேன். அநேக முறைகளில் எனக்கு அறுபது வருஷ காலமாகக் கிடைத்துள்ள அனுபவமானது, நண்பர்களின் அனுபவத்தால் உரம் பெற்ற நம்பிக்கையை அசையாத ஆற்றலுடையதாகச்செய்திருக்கின்றது. எந்த மனிதனும் அஞ்சாமல் அடிபணியாமல் தனியாக நிற்பதற்குகந்த ஜீவநாடிபோன்ற உண்மை இதுதான். நம்பிக்கையில்லாதவர் உள்ள காலம் வரை உண்மையைத் திரும்பத் திரும்பக் கூறவேண்டியது அவசியமே என்று பல வருஷங்களுக்கு முன் மாக்ஸ் முல்லர் என்னும் பண்டிதர் கூறியதில் ... நம்பிக்கை ...

—தமிழ் ஹரிஜன்

வெளிவந்துவிட்டது!

## நளவெண்பா — சுயம்வரகாண்டம்
## 1 — 55 செய்யுள்

ஆங்கில S. S. C. (1947—1948) தமிழ்ப் பாட புத்தகம்

விலை சதம் 50

கிடைக்குமிடம்:

**தனலக்குமி புத்தகசாலை**

சுன்னாகம் : : இலங்கை

## 259-ம் இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

நடைமுறையில் உள்ள புடவைக் கூப்பன் புஸ்தகத்தில் பின்வருங் கூப்பன்கள் 1946-ம் ஆண்டு யூலை மாதம் 11-ந் திகதி தவக்கம் புடவை கொள்முதல் செய்ய வலுவு பெறுகின்றன.

பெரியவர்களுடைய 'சீனியர்' புஸ்தகத்தில் ஒரு புள்ளி தனித் தனி பெறுமதியுள்ள S—1-ம், S—4-ம் இலக்கங்களும், இரு ½ புள்ளிகள் பெறுமதியுள்ள 23-ம் இலக்கமும். சிறுவர்களுடைய 'யூனியர்' புஸ்தகத்தில் ஒரு புள்ளி பெறுமதியுள்ள J—11-ம் இலக்கமும் இரு ½ புள்ளிகள் பெறுமதியுள்ள 22-ம் இலக்கமும்.

2. வியாபாரிகள், புடவையை விற்கும் நோக்கத்துடன் வாங்குபவர்களாக யாரையும் எண்ணும் போது புடவை விற்க மறுக்கலாமென அவர்கட்கு அதிகாரங் கொடுக்கும் பிரமாணத்தை நுணுக்கமாக அனுசரிப்பார்களென எதிர்பார்க்கப்படுகிறது. கடைகளில் இந்த அலுவற் பகுதிக்கு (டிப்பாட்மென்ற்) ச் சேர்ந்த இரண்டு மூன்று உத்தியோகஸ்தரை நிற்பாட்டிக் கடைக்காரருக்கு உதவிபுரிய உத்தேசிக்கப்பட்டுள்ளது. கொழும்பிலுள்ள வீதி விற்பனையாளர் ஒழுக்கு வரியில் (போலினில்) நிற்பதால் பயன் பெறமாட்டார்களெனப் புத்தி புகட்டப்படுகின்றனர்.

ஈ. ரெட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி

கொழும்பு
4-7-46 [2829]

## அகில இலங்கைச் சுகாதார விழா

### வலிகாமம் வடக்கு—கிழக்குப் பகுதிகள்

மேற்படி பகுதிகளின் சுகாதார விழா ஜுலை மாதம் 14-ந் திகதி தொடக்கம் 20-ந் திகதி வரை கொண்டாடப்படும். பொருட்காட்சிகளும், சொற்பொழிவுகளும், சுகாதாரக் கதம்பக் கச்சேரிகளும் ஒழுங்கு செய்யப்பெற்றிருப்பதாக உடுவிற் பகுதிச் சுகாதார பரிசோதகர் ஸ்ரீ. வ. சுப்பிரமணியம் தெரிவிக்கின்றார்.

## முதல்வரின் இறுதிச் சுமை?

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களைத் திறம்பட நடத்திவருகின்றார். ஈழகேசரி வாசகர்களுக்கு ஸ்ரீ அரியநாயகம் அவர்களை அறிமுகப்படுத்தவேண்டிய அவசியமேயில்லை.

ஸ்ரீ இராமச்சந்திரன் திருவிதாங்கூர் காங்கிரஸ் பிரமுகர். அத்துடன் ஹரிஜன் சங்கத்துக் காரியதரிசியாக இப்போது கடமையாற்றுகின்றார்.

இலங்கை இந்தியப் பிரச்னையை ஆராய்வதற்கு ஸ்ரீ அரியநாயகமும், ஸ்ரீ இராமச்சந்திரனும் விரைவில் இலங்கை நோக்குவார்கள். அதன்பின்னர் பண்டித ஜவஹர்லால் நேருவும் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரும் வருவார்கள். சகல விஷயங்களையும் இலங்கை மந்திரிகளுடன் பேசி ஒருமுடிவுக்கு வருவதற்கு நேருஜி மிகவும் விரும்புகின்றார். அத்துடன் தாம் இலங்கை செல்வதற்கு தருணம் பார்த்துக்கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

"இன்று இலங்கையில் நிகழும் விஷயங்களைக் கவனிக்கும்போது கோபம் அதிகமாகின்றது. இது சின்னத்தனமான ஒரு கொள்கை. இப்போதைக்கு ஒரு சிலருக்கு இதனால் சிறிதளவு நன்மை ஏற்படக்கூடும். ஆனால் ஏற்படும் விளைவுகள் பாரதூரமாகவிருக்கும்," என்பது பண்டித நேருவின் கருத்து.

பொதுவாக இலங்கைவாழ் இந்தியர் விவகாரம்பற்றி இலங்கை அரசாங்கம் கையாளும் முறைகளை நேருஜி கண்டித்திருக்கின்றார். பண்டித நேருவின் வெஞ்சினம் தர்மமற்றதென இங்குள்ள பத்திரிகைகள் கருதுகின்றன. விஷயங்களை அலசி ஆராயாமல் நேருஜி கோபங்கொள்ளுகின்றார் என டெய்லி நியூஸ் முதலாம் பத்திரிகைகள் தலையங்கங்கள் தீட்டியிருக்கின்றன. இங்கிலையிற் பண்டித ஜவஹர்லால் நேருவும், ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரும் இங்கு நேரில் விஜயம் செய்வது மிகவும் விரும்பத்தக்கது.

இலங்கையின் பொருளாதார நிலை தளருவதை இந்தியத் தலைவர்கள் ஒருபோதும் விரும்பமாட்டார்கள். அத்துடன் இலங்கையின் எதிர்காலம் இந்தியாவுடன் தொடர்புற்றிருக்கின்றதென்பதை இலங்கையும் உணரவேண்டும். ஆகவே இருநாடுகளும் மனவேற்றுமைகளையகற்றி ஒன்றுபட்டுத் தர்மமான முறையில் வாழ்வது அவசியமாகின்றது. இலங்கையின் விடுதலையில் ஆர்வமுள்ளவர்கள், இந்தியாவின் தொடர்புகளை அகற்ற ஒருபோதும் விரும்பமாட்டார்கள். இலங்கை இந்தியர்களின் சில நியாயமற்ற கோரிக்கைகளை ஏற்காது நீதிவழிச் சென்றால் தாயின் காலடியிற் கிடக்கும் சேய் சண்டை சச்சரவுகள் இன்றிச் சமாதானமாக இந்தியாவுடன் வாழமுடியும். இந்தியாவும் இலங்கையும் ஒன்றுபட்டு நின்றால்தான் ஏகாதிபத்தியத் தாசர்களைக் கீழைத்தேச நாடுகளினின்றும் துரத்திவிடுவது சாத்தியமாகும்.

## ஆசிரியர் தினம்
## வலிகாமம் கிழக்குபகுதி

மேற்படி கூட்டமானது 10-7-46 சாயந்தரம் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மண்டபத்தில் சைவவித்தியா விருத்திச் சங்கக் கெலரவ சாரியஸ்தர் ஸ்ரீ சு. இராசரத்தினம் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. கூட்டத்தின் நோக்கத்தைப் பற்றி அப்பகுதி ஆசிரியர் சங்கத் தலைவர் பண்டிதர் ஸ்ரீ க. மயில்வாகனம் கூறியபின் ஸ்ரீ R. S. எற்வேட்ஸ், ஸ்ரீ க. சிவகுரு, மேற்படி தலைவர், ஸ்ரீ சி. வீரசிங்கம் என்போர் ஆசிரியர்மாரின் சம்பளம் நியாயமற்ற முறையில் விதிக்கப் பட்டிருக்கிறதென உணர்ச்சிமிகப்பேசினர்.

புதிய சம்பளத் திட்டத்தில் ஆசிரியர்கட்கு நீதி வழங்கப்படவில்லை. ஆதலால் மந்திரி சபையார், அவர்களின் சம்பள விஷயத்தில் நீதி வழங்கிக் குறைகளை நிவிர்த்திசெய்து சம்பளத் திட்டத்தைத் திருத்தியமைக்க முன்வர வேண்டும் என்ற தீர்மானம் கூட்டத்தில் நிறைவேறியதென மேற்படி சங்கக் காரியதரிசி தெரிவிக்கின்றார்.

## முல்லைத்தீவுப் பகுதி
## ஆசிரியர் சங்கம்

ஷை கூட்டம் 10-7-46 புதன் வாரம் பி. ப. 4½ மணியளவில் முல்லைத்தீவு ஸ்ரீமான் கத்தோலிக்க பாடசாலையில் இளைப்பாறிய முதலியார் திரு. A. M. கனகசபாபதி J. P, அவர்கள் தலைமையில் ஆரம்பமாயிற்று. அவ்வமயம் தலைவர் அவர்களாலும், பிரசித்த நொத்தாரிஸ் திரு. C. தம்பையா அவர்களாலும், இன்னும் பல பிரமுகர்களாலும் ஆசிரியர்களின் அரிய சேவையையும், ஆசிரியர்கட்கு அரசாங்கம் செய்துள்ள அநீதியையிட்டுத் தாம் மிக வருந்துவதாகவும் கூறினர்.

"ஆசிரியர்களுடைய சம்பளத் திட்டம் சகிக்கமுடியாத அளவுக்குக் குறைந்ததாய் இருப்பதால், எங்கள் அதிருப்தியைத் தெரிவிப்பதுடன் ஆசிரிய தகைமையோடொத்த மற்றச் சேவையாளரது சம்பள அளவுக்காவது, ஆசிரியர்கள் சம்பளத்தை உயர்த்த உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற பிரேரணை நிறைவேறியது.

—கடிதம்

## நற் சுகத்திற்கு




எங்களிடம் P. S. R. சந்தனாதித் தைல வகைகளும் விற்பனைக் கிருக்கின்றன.

[2820]

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்–மயிலிட்டிதெற்கு 'திருமகள் நிலையம்' நா. பொன்னையா அவர்களால், சுன்னாகம், திருமகள் அழுத்தகத்தில் 1946 ஜுலை 14உ ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org